Registered as a Newspaper in Ceylon

விலைசதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி வைகாசி 26 ஆம் நாள் முஹர்ரம் 26 (8-6-64) திங்கட்கிழமை இதழ் 120

அங்கீகாரப்படி
தேசிய லொத்தர் (சுவீப்)
ஏக விநியோகஸ்தர்
கொழும்பு பிளான் ஜுவலறி கவுஸ்
நல்லூர், யாழ்ப்பாணம்.
தந்தி: சீதேவி. தொலைபேசி: 461.
கிளை விஜி கூல் பார்
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
(ராணி தியேட்டருக்கு எதிரில்)
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
சில்லறை வியாபாரத்திற்கு ஆள் தேவை
ரூ. 100/- கட்டுப்பணத்துடன் நேரில் சமூகமளிக்கவும்

அரசாங்கத்துடன்

# சமசமாஜக் கட்சி தனியே கூட்டு சேரும்

## கட்சி மகாநாட்டில் என். எம். குழு வெற்றி

### ஆதரவாக 507 வாக்குகள்; எதிர்த்து 179

கொழும்பு, திங்கள்

அரசாங்கத்துடன் சமசமாஜக்கட்சி தனியே கூட்டுச் சேரவேண்டுமென டாக்டர் என். எம். பெரேரா குழு கொண்டுவந்தபிரேரணை மீதான வாக்கெடுப்பு நேற்று மாலை நடைபெற்றபோது இப்பிரேரணைக்கு அமோக ஆதரவு கிடைத்தது. இப்பிரேரணைக்கு சாதகமாக 507 வாக்குகளும் எதிர்த்து 179 வாக்குகளும் கிடைத்தன. 16 பேர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

சமசமாஜக்கட்சி அரசாங்கத்துடன் தனியே கூட்டு சேர்வதா இல்லையா என்பதுபற்றி தீர்மானிப்பதற்கான கட்சியின் அந்தரங்க மகாநாடு சென்ற சனிக்கிழமை பிற்பகல் 3-30-க்கு புதிய நகர மண்டபத்தில் ஆரம்பமாகியது. மண்டபத்துக்கு உள்ளும் வெளியிலும் பலத்த பந்தோபஸ்து ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பர்மிட்டுகள் வைத்திருந்த அங்கத்தவர்கள் மட்டுமே இம்மகா நாட்டில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

அரசாங்கத்துடன் சமசமாஜக்கட்சி தனியே கூட்டுச்சேரவேண்டுமென்ற தனது பிரேரணைக்கு நிச்சயம் வெற்றி கிடைக்கும் என டாக்டர் என். எம். பெரேரா முன்னர் உறுதிதெரிவித்திருந்தார்

#### இருபிரேரணைகள் தோல்வி

கொல்வின் குழு கொண்டு வந்த, இடதுசாரி ஐக்கிய முன்னணி என்ற அடிப்படையிலேயே கூட்டு ஏற்பட வேண்டுமென வற்புறுத்தும், முக்கிய மந்திரிப்பதவிகள் முன்னணியினருக்கு சேரவேண்டு மென்ற பிரேரணை தோல்வியுற்றது. இதற்கு ஆதரவாக 75 வாக்குகளும் எதிராக 575 வாக்குகளும் கிடைத்தன.

தனித்தோ, முழுமையாகவோ, எந்தவித கூட்டும் சுதந்திரக் கட்சியுடன் ஆகாது என எட்மன்ட் குழு கொண்டு வந்த பிரேரணையும் தோல்வியுற்றது. ஆதரவாக 159 வாக்குகளும் எதிர்த்து 515 வாக்குகளும் கிடைத்தன.

மகாநாட்டில் கட்சியின் புதிய மத்திய கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது.

பரந்தன்

## இரசாயன தொழிலாளர் வேலைநிறுத்தம் நீடிக்கிறது

### எம். பி. யின் சமரசமுயற்சி தோல்வி

யாழ்ப்பாணம், திங்கள்

கடந்த ஆறு நாட்களாகப் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைத் தொழிலாளர்களால் நடத்தப்பட்டுவரும் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதெனத் தொழிலாளர்கள் ஏகமனதாக முடிவு செய்துள்ளனர்.

"தவறு செய்தவர்கள் என்று கருதப்படும் தொழிலாளர்களிடம் உள்விசாரணை முடிந்த பின்பே குற்றச்சாட்டுப் பத்திரம் வழங்கபபடவேண்டுமென்பது சட்டமாகும். இதற்கு மாருக நிர்வாகம் நடந்து கொண்டுள்ளது. எனவே முறைப்படி இப்பத்திரம் வாபஸ்பெறப்படாத வரையில் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்யப்படும்" என்று சங்கக் காரியதரிசி தொழில் மந்திரிக்குத் தந்திமூலம் செய்தியனுப்பியுள்ளார்.

கிளிநொச்சிப் பாராளுமன்றப் பிரதிநிதி நேற்று முன்தினம் தொழிற்சாலைக்கு விஜயம்செய்து தொழிலாளர்களை வேலைக்குத் திரும்பும்படி கேட்டுக்கொண்டார். தொழிலாளர்கள் இதற்கு இணங்க மறுத்துவிட்டனர்.

சகல தொழிலாளர் சங்கங்களினதும் ஆதரவு இதற்குக் கிடைத்துள்ளது. காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலைத் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள், பஸ் தொழிலாளர்கள், சுருட்டுத் தொழிலாளர்கள், நகரசுத்தித் தொழிலாளர்கள் ஆகியோர் இவர்களுக்கு ஆதரவளித்துள்ளனர்.

#### லாவோஸ விவகாரம

லண்டன், ஜூன் 7

லாவோஸ் பிரச்னைக்குத் தீர்வுகாணும்வகையில் 6 நாடுகளின் ஆரம்ப பேச்சுவார்த்தை நடத்தலாமென போலந்து தெரிவித்துள்ள ஆலோசனையை பிரிட்டன் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளதாக ரஷ்யாவுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரிவேணியிலும், கன்னியாகுமரியிலும்

# நேருவின் அஸ்தி இன்று கரைக்கப்படும்

## டில்லி முதல் அலஹாபாத் வரை லட்சோபலட்சம் மக்கள் அஞ்சலி

### கணவருடன், மனைவி கமலா நேருவின் அஸ்தியும் கரைக்கப்படும்

அலஹாபாத், ஜூன் 8

காலஞ் சென்ற இந்தியப் பிரதமர் ஸ்ரீ ஜவஹர்லால் நேருவின் அஸ்தி கங்கையும், யமுனையும், சரஸ்வதியும் கூடும் திரிவேணியிலும், தமிழ் நாட்டில் கன்னியாகுமரியிலும் நாட்டின் மற்றும் பல்வேறு பகுதிகளிலும் இன்று காலை கரைக்கப்படுகிறது.

நேரு, அருமையாகப் பத்திரப்படுத்தி வைத்திருந்தஅவரது ஆருயிர் மனைவி கமலா நேருவின் அஸ்தியும், கணவனது அஸ்தியுடன் திரிவேணியில் கரைக்கபபடும். கமலா நேரு 1936ல் காலமானர்.

நேற்று காலை நேருவின் அஸ்தியைத் தாங்கிக்கொண்டு புது டில்லியிலிருந்து புறப்பட்ட விசேஷ ரயில் இன்று காலை

(5-ம் பக்கம் பார்க்க)

#### 'சென்னையில் நேருவுக்கு பற்றிருந்தது'

சென்னை, ஜூன் 7

சென்னை நகரில் நேருஜிக்கு ஒரு தனிப்பற்று இருந்தது என தமிழ்நாடு முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் தெரிவித்துள்ளார். நேரு சுதந்திரபாரத சிற்பி எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

#### யு தாண்ட் ரஷ்யா செல்வார்

மாஸ்கோ, ஜூன் 7

ஐ. நா. பிரதம காரியதரிசி யு தாண்ட் அடுத்த மாதத்தில் ரஷ்யா செல்லவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவரது விஜயம் சம்பந்தமான திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை. ரஷ்யப் பிரதமர் திரு. குருஷ்சேவின் அழைப்பின் பேரிலேயே யுதாண்ட் அங்கு செல்லவிருக்கிருர்.

முன்னர் 1962ம் வருடம் ஆகஸ்ட் மாதத்தில் யு தாண்ட் ரஷ்யாவுக்குச் சென்றிருந்தார்.

#### தமிழ் இல்லை

அனுராதபுரம், ஞாயிறு

இலங்கை போக்கு வரத்து சபையின் அனுராதபுரம் டிப்போவைச் சேர்ந்த பஸ்களிலுள்ள பலகைகளில் தமிழின்றி சிங்களம், ஆங்கிலம் ஆகிய இரு பாஷைகள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. சில பஸ்கள் தனிச்சிங்களப் பலகைகளுடன் வீதிகளில் போக்கு வரத்துச் செய்கின்றன. இதனுல் சிங்களமும் ஆங்கிலமும் தெரியாதவர்கள் பஸ் ஏறுவதில் பெரும் இடைஞ்சல்படுகின்றனர்.

பாத்திரங்கள் வாங்கும் பொழுது
டொலர் மார்க் என்றே கேளுங்கள்

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்
14-டாம் வீதி கொழும்பு

உற்பத்தியாளர்கள்:
அலுமினியம் தொழிற்சாலை
மாவிட்டபுரம்.

மணிவாக்கு

கிடைத்த சுதந்திரம் தானாகவே நிலைத்திருக்கும் என்று நினைக்கவேண்டாம். அது நிலைத்திருப்பதற்கான காணிக்கையை நாம் எப்போதும் செலுத்திக் கொண்டிருக்க வேண்டும். சற்றே அலட்சியமாக, அல்லது அசட்டையாக இருந்தால் நமது சுதந்திரம் ஆபத்துக்குள்ளாகிவிடும்.

—ஜவஹர்லால் நேரு.

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegram: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு வைகாசி ௴ 26 ௳ (8-6-64)

## இரத்த தானம்

சுகாதாரப் பகுதியினரின் மக்கள் சுகாதார 'வாரக் கொண்டாட்டம் இன்று இலங்கை முழுவதிலும் ஆரம்பமாகிறது. இம்முறை இக் கொண்டாட்ட நிகழ்ச்சிகளுக்குதாயின் ஆரோக்கியம் என்னும் விஷயம் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது மிகப் பொருத்தமே.

இலங்கையில் ஜனப்பெருக்கம் அதிகரித்துள்ளது. உணவு உற்பத்தியோ அதிகரிக்கவில்லை. இந்நிலையில் ஆரோக்கியமில்லாத குழந்தைகள் பிறப்பதுடன் குழந்தை பெறும் தாய்மாரின் ஆரோக்கியமும் சீர்கெட்டு விடுகிறது. இதனால் வலுவுள்ள சமுதாயம் தோன்ற முடியாமலுள்ளது. ஆரோக்கியமான அன்னைதான் ஆரோக்கியமான குழந்தைகளையும் அதன்மூலம் ஆரோக்கியமான பலமுள்ள சமுதாயத்தையும் அளிக்க முடியும். எனவே இவ்வருட சுகாதாரவாரக் கொண்டாட்டத்தில் தாயின் ஆரோக்கியத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளதுபொருத்தமே

நாட்டின் பல இடங்களிலும் சுகாதார வாரக் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. வட பகுதியைப் பொறுத்தவரை கோப்பாய் மகளிர் ஆசிரிய கலாசாலையில் இன்று ஆரம்பமாகும்சுகாதார வாரக் கொண்டாட்டங்களில் இரத்ததானத்துக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் தினசரி பத்துப்போத்தல் இரத்தம் தேவைப்படுவதாக ஆஸ்பத்திரி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் இலங்கையில் வேறெந்த ஆஸ்பத்திரியையும் விட யாழ்ப்பாண ஆஸ்பத்திரி இரத்த வங்கியில்தான் இரத்தத்துக்கு மிகவும் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இரத்த புஷ்டியுள்ளவர்கள் இருப்பினும் இரத்தம் தானம் செய்யும் மனோபாவம் இங்கு குறைவாக இருப்பதே இதற்குக் காரணம். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இரத்த வங்கிப் பகுதிக்கு பொறுப்பாகவுள்ள டாக்டர் அம்மையார் ஒருவர் பல தடவைகளில் தமது இரத்தத்தையே தானம் செய்து பலருக்கு உயிரளித்திருக்கிறார்! நோயாளிகள் பலர் உயிருக்காகப் போராடிய பல சமயங்களில் இரத்தம் தேவையென அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டும் பயனில்லாமல் பல உயிர்கள் பிரிந்துள்ளன. சில சமயங்களில் அரசாங்க அதிபர் தென்னிலங்கை மக்களுக்கு வேண்டுகோள்விடுத்து இரத்த தானம் பெற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு உதவி புரிந்திருக்கிறார்.

இதைப்பற்றி கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்களத் தினசரிப் பத்திரிகையொன்று குறிப்பிட்டு, "யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு சிங்களவருடைய இரத்தம் நல்லது; சிங்களம்தான் கூடாதோ!" என்று கிண்டல் செய்திருந்தது. அது கிண்டலும் கேலியும் செய்திருந்தும்கூட அதன் பின்னரும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இரத்த வங்கி நிறையவில்லை.

"தமிழர்கள் இரத்தம் சிந்தத் தயாராக இருக்கிறார்கள். தானம் செய்யத்தான் தயாராக இல்லை" என்று சில மாதங்களுக்கு முன் ஒருவர் பொதுக் கூட்டத்தில் கேலி செய்தார். இவ்விதம் கேலிக்கும் கிண்டலுக்கும் உள்ளான யாழ்ப்பாண மக்களின் கௌரவத்தைக் காப்பாற்றும் முறையில் கோப்பாய் சுகாதாரவிழாவில் வலி. வடக்கு காரியாதிகாரி தலைமையில் நூறுதொண்டர்கள் இரத்த தானம் செய்யவிருக்கிறார்கள். இது பலருக்கும் மகிழ்ச்சியும் நம்பிக்கையுமளிப்பதாகும். இம் முயற்சியில் முன்னிற்கும் மாவட்ட வைத்திய அதிகாரியையும் காரியாதிகாரியையும்இப்பகுதி கிராம சேவையாளர்களையும் பாராட்ட வேண்டும். மற்றும் வலுவுள்ள பொது மக்களும் இவர்களைப் பின்பற்றி இரத்தம் தானம் செய்ய முன்வர வேண்டும். இதன் மூலம் பல உயிர்களைக் காப்பாற்றும் புண்ணியம் கிடைப்பதுடன் தமிழர்கள் இரத்ததானம் செய்யமாட்டார்கள் என்ற அவப்பெயரும் நீங்க வழிபிறக்கும்.

# நாடெங்கும் இன்று ஆரம்பமாகும் மக்கள் சுகாதார வார விழா

## கோப்பாயில் பல முக்கிய நிகழ்ச்சிகள்

**இலங்கை சுகாதாரப் பகுதி கொண்டாடும் மக்கள் சுகாதார வார விழா இன்று ஆரம்பமாகின்றது. இம்மாதம் பதினன்காம் திகதி வரை இவ்விழா நாடெங்கிலும் விரிவான முறையில் கொண்டாடப்படும். இலங்கையின் வடபகுதியில் மக்கள் சுகாதார வார விழாவைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் கோப்பாய் சுகாதார பகுதியில் நடைபெறும் சுகாதார விழா, பல விதத்திலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவிருக்கும். இவ்விழா கோப்பாய் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெறுகிறது.**

கோப்பாய் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் இரத்ததான நிலையமும் அங்கு இடம்பெறுகின்றது. பொருட்காட்சி, தேகப்பயிற்சிகள், கரபந்தாட்டப் போட்டிகள், சொற்பொழிவுகள், பொதுக் கூட்டங்கள் சுகாதார கருத்தரங்குகள் ஆகியவை நடைபெறவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

### இரத்ததானத்தின் முக்கியத்துவம்

ஆஸ்பத்திரிகளில் போதிய இரத்தம் இல்லாத காரணத்தினால், பல தடவைகளில் நோயாளர்கள் இறக்கவேண்டி நேரிடுகிறது. குறிப்பாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு தினமும் பத்து போத்தல் இரத்தம் தேவைப்படுகிறது. ஆனால் இரத்ததானமளிக்க ஒருவரும் முன்செல்லாததால் இரத்த வங்கி எப்பொழுதும் குறைவாகவே காணப்படுகிறது. இதன் விளைவாக பல அபாயம் ஏற்பட்டுள்ளது என்பதை மக்கள் நன்கு உணரவேண்டும்.

சுகாதார வார விழாவினை முன்னிட்டு கோப்பாய் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இரத்ததான நிலையமொன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்துக்கு பொதுமக்கள் சென்று இரத்த தானம் செய்யலாம்.

18 வயதிலிருந்து 55 வயது வரையிலுள்ள ஆரோக்கியமானவர்களும் கயரோகம், நெருப்புக் காய்ச்சல், செங்கமாரி, மலேரியா, மேகரோகம் ஆகிய நோய்களால் பீடிக்கப்படாதவர்களும் இரத்ததானம் அளிக்கலாம். ஒருவர் மூன்று மாதத்திற்கு ஒருமுறை இரத்த தானமளிக்கலாம். இரத்த தானம் செய்வதால் எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாது என்பதை மக்கள் நன்குணர வேண்டும். இதற்குப் பதிலாக இரத்ததானஞ் செய்பவருக்கு பல நன்மைகளும் ஏற்படுகின்றன.

*இரத்ததானம் செய்வதால் ஒருவர் தமது உடலை பொதுவாகச் சீர்படுத்துவதுடன் இரத்த அணுக்களுக்கு இளமையும், பெருகிவளரும் தன்மையும் கொடுக்கும் உயர் இரத்த அமுக்கம் அதிகமாக உள்ளவர்களுக்கும் அந்நிலை ஏற்படக்கூடிய குறிகள் உள்ளவர்களுக்கும் மிகவும் பிரயோசனமானது *இரத்தத்தில் சஞ்சீவ அணுக்கள் மிதமிஞ்சி உள்ளவர்களுக்கு (Polycythaemia) மிகவும் நல்லது *இயற்கைக்கு மாறாக இரும்புச் சத்துப்படிவு (Haemosiderosis) இருப்பவர்களுக்கு ஒரே வைத்திய முறை இரத்தத்தை இடைக்கிடை வெளியில் எடுப்பதேயாம்.

ஒருவரின் உடலிலிருந்து மிகக் குறுகிய நேரத்தில் அதாவது நான்கு நிமிட நேரம் வரையில் இரண்டு அரைப் பைந்து இரத்தம் வெளிவந்தால், அவருக்கு எந்தவிதமான தீங்கும் ஏற்படாது. ஆகையினால் இரத்ததானம் செய்யும்போது இரண்டு அரைப் பைந்து இரத்தத்தை அரை மணி நேரத்தில் எடுப்பதால் எவ்வித தீங்கும் விளைய இடமில்லை. அதனுடன் இந்த இரத்தம் இரண்டொரு நாட்களில் பழைய நிலையையும் அடைந்து விடும்.

### மற்றுமொரு நன்மை

இரத்ததானம் செய்பவருக்கு வேறு ஒரு நன்மையும் கிடைக்கிறது. இரத்ததானம் செய்ய விரும்பும் ஒருவருக்கு முதலில் வைத்தியபரிசோதனை நடக்கும். அந்தப் பரிசோதனையில் அவருக்கு நோய் எதுவும் காணப்பட்டால், தகுந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது. இரத்த தானம் செய்வதன்மூலம், ஒருவருக்கு எவ்வித தீங்கும் உண்டானதென்று இது வரை யாரும் கேள்விப்பட்டது கிடையாது. ஆனால் இப்பேற்பட்ட புண்ணியச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு உடல் உளச் சாந்தி ஏற்படும் என்பது மறக்கமுடியாத ஒரு உண்மை.

### பத்துரூபாய் அன்பளிப்பு

இரத்த தானம் செய்பவர்களுக்கு தலைக்கு பத்து ரூபா விதம் அன்பளிப்பு கொடுக்கப்படும். இப்படியாக பல நன்மைகளையும் முன்னிட்டு நீங்கள் இரத்ததானமளித்து ஓர் அரிய உயிரை காப்பாற்றும் பெருமையை அடையுங்கள்.

### இன்றைய நிகழ்ச்சிகள்

கோப்பாய் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இன்று ஆரம்பமாகும். முதலநாள் நிகழ்ச்சிகள் விபரம் வருமாறு: காலை 8-45-க்கு இருபாலை சந்தியிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகும். இதன்பின்னர் சுகாதாரப் பொருட்காட்சியை இலங்கையிலுள்ள ஆஸ்திரேலிய ஹைகமிஷனர் திரு. பி. ஸி. பலாட் திறந்துவைப்பார். கோப்பாய் எம். பி. திரு. எம். பாலசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்துவார். இதனைத் தொடர்ந்து செல்வி எம். மரியாம் சந்திரா உரை நிகழ்த்துவார். 9-25க்கு பொருட்காட்சி பொது மக்களுக்கு திறந்துவைக்கப்படும். 9-30-க்கு உடல்பயிற்சி போட்டிகள். இந்தப் போட்டிகளில் அச்சுவேலி சென். திரேஸாஸ் பாடசாலை, திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை, கோப்பாய் கிறிஸ்தியன்கல்லூரி, புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, உரும்பராய் இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, கோப்பாய் மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றைச் சேர்ந்த மாணவிகள் கலந்துகொள்கின்றனர். 9-30-க்கு இரத்ததான நிலையத்தில் பொதுமக்கள் இரத்ததானம் செய்யலாம். பகல் 1-30-க்கு ஆசிரியர்களின் சுகாதார கருத்தரங்கு பட்டியல் தயாரிப்பு 2-00-க்கு கருத்தரங்கு நிகழ்ச்சியை திரு. எஸ். தணிகாசலம் ஆரம்பித்து வைப்பார் இதன்பின்னர் டாக்டர் திருமதி எம். அருளம்பலம், செல்வி எஸ். சின்னப்பு, திரு. வி. கந்தப்பு, டாக்டர் சி. சிவஞானசுந்தரம் ஆகியோர் பல்வேறு விஷயங்கள் குறித்து உரை நிகழ்த்துவார்கள். மாலை நிகழ்ச்சிகளில் கரபந்தாட்ட சுற்றுப்போட்டி, பொதுக்கூட்டம், பிரிட்டிஷ் தூதரகத்தின் திரைப்படக்காட்சி ஆகியவை இடம்பெறும்.

இன்றைய நிகழ்ச்சிகளை அரசாங்க தகவல் பகுதியினர் செய்திப் படமாக்குவார்கள். இச் செய்திப் படம் நாடெங்கிலும் காண்பிக்கப்படும்.

## நெல் விளைச்சல் அதிகரிப்பு

நல்லூர், திங்கள்

இலங்கையின் இவ்வருடத்திய நெல் விளைச்சல் அமோகமான வெற்றியை அளித்துள்ளது. கடந்த வருடத்தைவிட இவ்வருடம் ஒருலட்சத்து 20 ஆயிரம் புசல் அதிகமாக விளைச்சல் ஏற்பட்டுள்ளதாக விவசாயப்பகுதி அறிவித்துள்ளது.

கடந்தவருடம் நெல் விளைச்சல் மூன்று இலட்சத்து 20 ஆயிரம் புசலாக இருந்தது. இவ்வருடம் அமோக நெல் விளைச்சலுக்கு இரு காரணங்களை விவசாயப்பகுதி குறிப்பிட்டுள்ளது.

விவசாயிகளுக்கு இலகுவான முறையில் கடன் வசதி அளித்திருப்பதும், ஜப்பானிய முறைப்படி நாற்பயிர்களுக்கு பசளையிடப்பட்டதும்தான் நெல் விளைச்சலுக்கு முக்கிய காரணமாக விவசாயப்பகுதி குறிப்பிட்டுள்ளது.

அடுத்த வருடங்களில் இம்முறையைப்பின்பற்றி பெரும் விளைச்சலை எதிர்பார்ப்பதாக விவசாயப்பகுதி தெரிவித்துள்ளது.

## நாட்டிலும் நகரிலும்

சென்ற புதன்கிழமை மத்தியானம் அகோரமான சுடு வெய்யிலில், கால்கள் பதைபதைக்க, நாக்கு வரள, குடல் பிடுங்க, யாழ்ப்பாணம் பஸ் ஸ்டாண்டில் போய் நான் வழக்கமாகச் செல்லும் இத்தனையாம் நம்பர் பஸ் எத்தனை மணிக்கு வரும் என்று அங்கே கடமை செய்யும் ஓர் அதிகாரியிடம் கேட்டேன். ஒழுங்கான நேர அட்டவணை பஸ் நிலயத்தில் எப்போதுமே இருந்ததில்லை ஆகையால் எல்லோரும் அவரைத்தான் போய் விசாரிப்பார்கள். அவரும் டக்டக்கென்று '786 இத்தனை மணிக்கு, 779 இத்தனை மணிக்கு' என்று பதில் சால்லுவார்.

நான் கேட்டவுடனே டக்கென்று 1-25 க்கு என்றார். சரி, இன்னும் அரை மணி நேரம் இருக்கிறதே என்று நினைத்துக் கொண்டு கடைத் தெருவில் சாமான் வாங்கப் போய்விட்டு திரும்பி 1-15 க்கு வந்தேன், பஸ்வரவில்லை 1-50 க்குத் தான் வரும் என்று அந்த அதிகாரி மறுபடியும் தெரிவித்தார். வேறு மார்க்கமில்லை கும்பலோடு கும்பலாய் நானும் இடித்து நெருக்கிக் கொண்டு கால் கடுகடுக்க நின்றேன். பஸ் நிலயத்தில் உட்காருவதற்கு இடம் கிடையாது. 1-45 ஆகிறது. நான் போகும் பஸ்ஸில் செல்ல வேண்டிய ஒரு வயது போன கிழவி வந்து 'எங்கடை பசவு எத்தனை மணிக்கு மேனை' என்று மெல்லக் கேட்டாள். அந்த அதிகாரி டக்கென்று பதில் சொன்னார், 2-10-க்கு என்று!

இவரென்ன, கொழும்பு ஒப்ஸெவேட்டரி, கால நிலையைப் பற்றி ஷேஷ்யம் சொல்லுவது போல, இப்படி முன்பின் யோசியாது அவிழ்த்து விடுகிறாரே என்று நான் யோசித்துக் கொண்டிருக்கும் போது எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் வந்து 'உங்கள் பஸ் அதோ நிற்கிறதே' என்றார். ஆச்சரியம், ஆனால் உண்மை! பஸ் வந்தே வந்து விட்டது.

ஆச்சரியம் என்னவென்றால் பஸ் வந்த சேதி அந்த அதிகாரிக்குத் தெரியவில்லை. "பஸ் வந்து விட்டதாமே! நீங்கள் சொல்லவில்லையே!" என்றேன்— கொஞ்சம் தயக்கமாகத்தான்— "ஏன், நீங்கள் ஒவ்வொரு பஸ்ஸாய் போய் பார்க்க வேண்டியது தானே!" என்று அந்த அதிகாரி டக்கென்று பதில் சொன்னார்!

கொஞ்ச நாளைக்கு முன் இ. போ. ச. மரியாதை வாரம் என்பதாக ஒன்று நடந்ததல்லவா? அதன் பலாபலன் தான் இதுவாகும் என்று நினைத்து கொண்டு பஸ்ஸில் ஏறினேன். அது ஏற்கனவே அரைவாசி நிரம்பியிருந்தது. அதிகாரியின் வாய்ப் பிறப்புகளை கேட்டுக் கொண்டிருந்தேனேயானால் நிச்சயம் பஸ் போயிருக்கும். என்னைப் போல அவரை நம்பியிருந்த அந்தக் கிழவி "பசுவை"க் காணாத கன்று போலத் தவித்திருப்பாள்.

இந்தச் சம்பவத்தில் காணப்படும் இரண்டு முக்கியமான விஷயங்கள் என்ன வென்றால் ஒன்று பஸ் வந்தது அதிகாரிக்குத் தெரியாது. கண்டக்டரோ, சாரதியோ அவரிடம் தெரிவிக்கவில்லையா? ஏன் அவர் இப்படி எங்களை கண்ணுமூச்சி காட்டினார்?

இரண்டாவது, பஸ் நிலயத்தில் ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு பஸ் வந்துகொண்டும் போய்க் கொண்டும் இருக்கும். ஒவ்வொரு பஸ்ஸும் வந்தவுடனே இது எமது பஸ் தானா என்று பிரயாணிகள் எல்லோரும் போய் சோதனை போடவேண்டுமா? அப்படியானால் பஸ் நிலயத்தில் அதிகாரிகள் இருக்க வேண்டிய அவசியமில்லையே!

இப்படியெல்லாம் நினைந்து நெக்குருகிக் கொண்டு 'அப்

(5-ம் பக்கம் பார்க்க)

# நேரு அஸ்தி டில்லியிலிருந்து திரிவேணி புறப்பாடு.

## லட்சோப லட்சம் மக்கள் வழிநெடுக அஞ்சலி

### 4000 துருப்புக்கள் நிற்க பீரங்கி வண்டி இழுத்துச் சென்றது

புதுடில்லி, ஜூன். 7

காலஞ்சென்ற பண்டித ஜவஹர்லால் நேருவின் அஸ்தி இன்று புதுடில்லியிலிருந்து அலகாபாத்துக்குக் கொண்டு செல்லப்பட்டபோது துக்கம் தோய்ந்த பல லட்சக்கணக்கான மக்கள் இறுதி தரிசனம் செய்தனர்.

ஸ்ரீ நேருவின் அஸ்தி அதிகாலை 6-30 க்கு பிரதமரின் வாசஸ்தலத்திலிருந்து புறப்பட்டது. 8 மணிக்குப் பின்பே புகையிரத நிலையம் வந்துசேர்ந்தது. முப்படைகளையும்சேர்ந்த 4000 துருப்புக்கள் வழிநெடுக நிறுத்தப்பட்டிருந்தனர்.

சரியாக காலை 8-15 மணிக்கு வெள்ளை நிறம் பூசப்பட்ட நேருவின் அஸ்தியைத்தாங்கியிருந்த ரயில் பெட்டியுடன் விசேஷ ரயில் அலகாபாத்துக்குப்புறப்பட்டது. இந்த ரயிலில் 2 என்ஜின்களும், 18 பெட்டிகளும் இணைக்கப்பட்டிருந்தன. சஞ்சய், ராஜீவ் ஆகிய நேருவின் இரு பேரர்களும், புதல்வி இந்திரா காந்தி, நேரு குடும்பத்தினர் ஆகியோரும், உப ஜனாதிபதி டாக்டர் ஸகீர் ஹுசெய்ன், மத்திய மந்திரிகள், நூற்றுக்கணக்கான எம். பி.க்கள், பிரபலஸ்தர்கள், நிருபர்கள் ஆகியோர் இந்த ரயிலில் சென்றனர். நாளை அதிகாலை 5 மணிக்கு அஸ்தி அலகாபாத் சேரும். அங்கு நேருவின்பிறந்த இல்லமான ஆனந்த பவனில் வைக்கப்பட்டு, பின் கங்கையும், யமுனையும், சரஸ்வதியும் கூடும் திரிவேணியில் கரைக்கப்படும்

பிரதமரின் இல்லத்திலிருந்து அஸ்தி பீரங்கி வண்டியில் வைக்கப்பட்டு எடுத்துவரப்பட்டது. வழிநெடுக ராம்தூன் பாடப்பட்டது.

ஊர்வலத்தின் முன்வரிசையிலும், ரயில் நிலையத்தில் அஸ்திக் கருகிலும் நின்ற தலைவர்களில் ஷேக் அப்துல்லா தொடர்ந்து காணப்பட்டார். வீடுகளிலும், கூரைகளிலும், ஜன்னல்களிலும், மரக்கிளைகளிலும் ஜனசமுத்திரம் அளவிடற்கரிய அளவில் பெருக்கெடுத்திருந்தது.

நேற்று கேரளத்தில் உள்ள கோட்டயத்தில் 5 லட்சம் மக்கள் மறைந்த தலைவரின் அஸ்தியைத் தரிசித்தனர்.

நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பல விசேஷ ரயில்கள் உரிய இடத்திற்கு நேருவின் அஸ்தியைத் தாங்கிச் செல்லவிருக்கின்றன.

ஜவஹர்லால்நேரு ஆராயச்சி நிலையம் ஒன்று ஸ்தாபிக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது. நேருவின் எழுத்துக்கள், பேச்சுக்கள் இதர விஷயங்கள் ஆதியன இங்கு வைக்கப்பட்டிருக்கும்,

நியூயோர்க் உலகச் சந்தையில் ஜவஹர்லால் நேரு கண்காட்சி செப்டம்பர் மாதம்நடத்தப்படவிருக்கிறது.

## நேருவின் ஆன்ம சாந்திக்கு வாஷிங்டனில் பிரார்த்தனை

### ஜனாதிபதி, ரஸ்க் கலந்துகொண்டனர்

வாஷிங்டன், ஜூன் 7

நேரு ஆன்மசாந்தியடைய வாஷிங்டன் கதீட்ரலில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸனும், அவரது மனைவியும் கலந்து கொண்டனர்.

உலக ஜனநாயகத்துக்காகவும், நலனுக்காகவும் பாடுபட்டவர் நேரு என எஸ். ஸ்வர்த்பங்கர் அப்போது குறிப்பிட்டார்.

பிரார்த்தனையின் போது தேவாலயத்தில் ஏராளமானோர் கூடியிருந்தனர். ரெவரண்ட் பிரான்ஸிஸ் ஸைரே பிரார்த்தனையை நடத்தி வைத்தார். பின் இந்திய தூதர் திரு பி. கே. நேரு பகவத்கீதையிலிருந்து சுலோகங்களைப் படித்தார்.

கண்யம், கருணை தீரம், ஞானம் முதலிய குணாதிசயங்களுடன் விளங்கிய நேருவின் நினைவு அவரை நன்கறிந்தவர்கள் விஷயத்தில் எப்போதும் குடிகொண்டிருக்கும் என திரு. பங்கர் குறிப்பிட்டார்.

குழந்தைகளிடம்நேருகொண்டிருந்த அன்பைப்பற்றியும் திரு. பங்கர்குறிப்பிட்டு இனம், ஜாதி, நிறம், பணக்காரன், ஏழை முதலிய வேற்றுமைகளை அகற்றவேண்டுமென்பதே அவரது லட்சியம் என்றார்.

ஜனாதிபதி ஜோன்ஸன், அவரது மனைவி, வெளிவிவகார மந்திரி திரு டீன் ரஸ்க், இந்தியத் தூதரின் மனைவி ஸ்ரீமதி பி. கே. நேரு ஆகியோர் பிரார்த்தனையில்கலந்துகொண்டனர்.

ஜனாதிபதியும், ஸ்ரீமதி ஜோன்ஸனும் கறுப்பு உடைகளை அணிந்திருந்தனர். யு. எஸ். பிரதம நீதிபதியும் பிரார்த்தனையில் கலந்து கொண்டார்.

பின் அனைவரும் கண்களில் நீர் ததும்ப வெளியே சென்று கொண்டிருந்தனர்.

## சென்னையில் இலங்கை தூதரகம் முன் உண்ணாவிரதம்

### சிங்கள திணிப்பு காரணமாம்

சென்னை, ஜூன், 7

"இலங்கைத் தமிழ் மன்ற"த்தைச் சேர்ந்த 5 அங்கத்தினர்கள் சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள இலங்கை உதவி ஹைகமிஷனர் காரியாலயத்தின் முன்பு 12 மணி நேரம் வரை உண்ணாவிரதம் இருந்தனர்.

"சிங்களத் திணிப்பு வேண்டாம்", "எங்களுக்குப் பிரஜா உரிமைதருக" என்ற கோஷங்களடங்கிய அட்டைகளைக் கையிலேந்தி இந்தக் காரியாலயத்தின் முன் அமர்ந்து அவர்கள் உண்ணாவிரதமிருந்தனர்.

தற்காலிக வாசபர்மிட் கெடு தீர்ந்தவுடன் இலங்கையிலிருந்து இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப்பட்ட இருவர் இந்தக் கோஷ்டியிலிருந்தனர்.

"இலங்கை தமிழ் மன்றம்" என்ற பெயர் இதற்கு இருந்தபோதிலும் எல்லா இந்தியர்களுக்கும் பொதுவான ஸ்தாபனம் இது என மன்றத்தின் உபதலைவர் திரு. பிரான்சிஸ் கூறினர்.

இலங்கையிலுள்ள தமிழர்கள் முன்புள்ள பிரச்னைகளை உலக மக்களின் கவனத்துக்கு கொண்டுவரும்பொருட்டு தாங்கள் உண்ணாவிரதம் இருந்ததாகவும், இலங்கையில் குடியேறியுள்ள இந்தியர்களுக்கு தார்மீக ஆதரவு காட்டுவதே தங்கள் நோக்கம் என்றும், எந்த அரசியல்கட்சிக்கும் தங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்றும் அவர் கூறினர்.

உண்ணாவிரதத்துக்குப் பின் இவர்கள் ராஜாஜியைச் சந்தித்து, அவருக்கு மாலையிட்டு அவரது ஆசியைக் கோரினர்.

## ஜகஜீவன் ராம் மந்திரி சபையில் சேருவார்

புதுடில்லி, ஜூன் 7

ஸ்ரீ மொரார்ஜி தேசாய் தமக்கு இரண்டாவது அந்தஸ்து தரப்படவேண்டும் எனவற்புறுத்த மாட்டார் என்ற தகவலையொட்டி அவர் புதிய மந்திரி சபையில் சேர்த்துக் கொள்ளப்படும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

அதிகப் பொறுப்புள்ள இலாகா ஏதாவது அவருக்குத் தரப்படும் பட்சத்தில் கீழ் அந்தஸ்தை அவர் ஏற்பார் என்று அவரது ஆதரவாளர்கள் சிலர் கூறினர்.

உள்துறை, நிதி, பாதுகாப்பு போன்ற முக்கியமான இலாகாக்களில் மாறுதல்கள் எதுவும் உத்தேசிக்கப் படவில்லை. எனவே திரு. தேசாய்க்கு தகுந்த இலாகாவை காண்பது அத்தனை எளிதல்ல.

மந்திரி சபையில் சேருமாறு ஸ்ரீ ஜகஜீவன்ராம் கேட்டுக் கொள்ளப்பட்டதாயும், அதனை அவர் ஏற்றுக்கொண்டிருப்பதாயும் நம்பகமாகத் தெரிகிறது. காமராஜ் திட்டப்படி வெளியேறிய மந்திரிகளில் முதலாவதாக அணுகப்பட்டவர் ஸ்ரீ ஜகஜீவன்ராம்.

ஸ்ரீ மொரார்ஜியும், பட்டீலும் இன்னமும் அணுகப்படவில்லை.

ஸ்ரீ சாஸ்திரி பிரதம மந்திரியாகப் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளும் ஜூன் 9-ம் திகதி சில மந்திரிகளின் பெயர்களை மட்டும் தெரிவிப்பார் என விஷயமறிந்த வட்டாரங்கள் கூறின.

## பர்மிய இந்தியரும் பாகிஸ்தானியரும்

புதுடில்லி, ஜூன் 7

பர்மாவிலுள்ள இந்தியர்களை விரைவில் தாயகம் கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்காக விசேஷ விமான சர்விஸ்களும் நடத்தப்படவிருக்கின்றன.

பர்மாவில் அரசாங்கத்தின் புதிய கொள்கை விஷயமாக 4000 பாகிஸ்தானியர் பாதிக்கப்பட்டிருப்பதாயும்,இதுபற்றி பர்மாவுடன் பேச்சு நடத்தப்பட்டுவருவதாயும் பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி பூட்டோ கூறினர்.

### தென் ரொடீஷியா இடம்பெறாது

லண்டன், ஜூன் 7

அடுத்து லண்டனில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டிற்கு தென் ரொடீஷியா அழைக்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டது.

### நேருஜிக்கு அனுதாபம்

சுழிபுரம், ஞாயிறு

வழக்கம்பரை அம்மன் கோவிலில் கடந்த வெள்ளிக்கிழமை நேருஜிக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் விசேட கூட்டுப்பிரார்த்தனை ஒன்று நடைபெற்றது. நேருஜியின் ஆத்மசாந்திக்காக ஐந்து நிமிட மௌனமும் அனுஷ்டிக்கப்பட்டது.

## பர்மாவுக்கு தமிழ் மந்திரியை அனுப்புக

### மா. பொ. சிவஞானம் கோரிக்கை

சென்னை, ஜூன் 7

"பர்மாவில் தமிழர் நிலை மிகவும் மோசமாகிவருகிறது. பர்மா தமிழர் கலாச்சாரக் கழகம் போன்ற பொது அமைப்புக்களிடமிருந்து எனக்கு வந்துள்ள கடிதங்கள் மனதுக்கு வேதனையைத் தருகின்றன. இவ்விஷயத்தில் பாரத அரசுக்குள்ள பொறுப்புணர்ச்சியை நான் சந்தேகிக்கவில்லை. ஆனல் இதுவரை எடுத்துள்ள முயற்சிகள் போதுமானவையாகவோ, தமிழக மக்களுக்குத் திருப்தி தரக்கூடியதாகவோ இல்லை."

என திரு. ம பொ. சிவஞானகிராமணியார் கூறியிருக்கிறார்.

"பர்மா தமிழர் நிலையை நேரில் அறிந்துவர டில்லியிலுள்ள தமிழ் மந்திரிகள் ஒருவரை உடனடியாக பர்மாவுக்கு அனுப்புமாறு தமிழக மக்கள் பாரத அரசை வற்புறுத்த வேண்டும்.

இன்றுள்ள முக்கிய பிரச்னை தமிழர்களிடமிருந்து பறிக்கப்படும் சொத்துக்களுக்கு, பர்மா அரசிடமிருந்து உடனடியாக நஷ்டஈடு வாங்கித் தருவதாகும். இவ்விஷயத்தில் இந்திய அரசு கண்டிப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பர்மா தமிழர்கள் சொத்து விஷயத்தில் பாரத அயல்நாட்டுத்துறைகாரியதரிசிக்கும், பர்மிய அயல் நாட்டுத்துறை காரியதரிசிக்குமிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் திருப்திகாரமானதாக இல்லை. அது வெறும் கண்துடைப்பு முயற்சிதான.

பர்மாவிலிருந்து அடுத்த சில மாதங்களில் சுமார் 2 லட்சம் தமிழர்கள் தமிழகம் வரக்கூடும் என அறிகிறேன். இவ்வளவு பெருந்தொகையினரை வரவேற்றுப் புனர்வாழ்வளிப்பது பெரும் பிரச்னையாதலால், அதற்கெனத் தனியாக ஒரு இலாகா ஏற்படுத்தவும் தயங்கக் கூடாது. அதற்காகும் செலவு முழுவதற்கும் மத்திய அரசே பொறுப் பேற்கவேண்டும்.

பர்மா தமிழர்களின் கண்ணீரைத் துடைப்பதில் அக்கறை காட்டுமாறு, தமிழக அரசினரையும், அரசியல் கட்சிகளையும் வேண்டிக் கொள்கிறேன்" என்றும் சிவஞானம் கூறுகிறார்.

## எட்டுப் பிள்ளைகளை காணவில்லை!

### சுழிபுரத்தில் பரபரப்பு

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் கிராமத்தைச் சேர்ந்த எட்டுப் பிள்ளைகளைக் காணவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் வீட்டு வேலைக்காகவும், வேறு சில்லறை வேலை செய்வதற்காகவும் யாழ்ப்பாணத்தை விட்டு மற்றைய பகுதிகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டிருக்கலாமெனத் தெரியவருகின்றது.

பிள்ளைகளின் தகவல் ஒன்றும் தெரியாததால் பெற்றோர் மிகுந்த பரபரப்புக்குள்ளாகியுள்ளனர். பிள்ளைகள் உயிருடன் இருக்கின்றார்களா அல்லது வேலை செய்யக்கும் முதலாளிமாரினுல் தகவல் கொடுக்கமுடியாதவாறு தடுக்கப்பட்டுள்ளார்களா என்பது கூடத் தெரியவில்லை.

காணமற்சென்றவர்களில் குடாகலையைச் சேர்ந்தவர்கள் மூவரெனத் தெரியவருகின்றது. சங்கானைப் பொலிஸ் நிலையத்திலும் காங்கேசன் துறைப் பொலிஸ் அதிபரிடமும் முறைப்பாடுசெய்துள்ளனர். ஆனல் இதுகுறித்து இதுவரை ஒருவித தகவலும் கிடைக்கவில்லை. பிள்ளைகளின் எல்லா விபரங்களையும் பொலிஸ் நிலையத்தில் கொடுத்துள்ளனர்.

## தமிழ் பேசும் மாணவர் உரிமை இயக்கம் இம்மாதம் ஆரம்பம்

நல்லூர், திங்கள்

தமிழ்பேசும் மாணவர்களுக்கான மாணவ இயக்கமொன்று இம்மாதம் உருவாகும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இம்மாதம் 24-ம் திகதி யாழ். நகரமண்டபத்தில் நடைபெறும் மாணவ உரிமை மகாநாடு இதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடபகுதிக் கல்லூரிகளில் கல்விபயிலும் மாணவர்களுக்கு உள்ள கஷ்டங்களை எல்லோரும் அறியச்செய்து நடவடிக்கை எடுக்க முயற்சி செய்வதே இம் மகாநாட்டின் முக்கிய நோக்கமாக இருக்குமெனத்தெரிகிறது.

சமீபகாலத்தில் ஏற்பட்டிருக்காத புதிய விழிப்புணர்ச்சி மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டிருப்பதனுல் இத்தகைய மகாநாடு அவர்களுக்கு பலன் அளிக்கும் என்ற நம்பிக்கையும் வலுவடைந்துள்ளது.

மாணவர்களை எதிர்காலத்தில் தொழில் துறைகளில் ஈடுபடுத்தி அவர்களது வாழ்வு சிறப்புற அமைவதற்கு பெற்றோர்கள் உதவிபுரியவேண்டுமென்றும் இந்த மகாநாடு கோருமெனவும் சொல்லப்படுகின்றது.

24-ம் திகதி நடைபெறும் மாணவ உரிமை மகாநாட்டைத் தொடர்ந்து மாணவர்களை ஒன்றுபடுத்தும் வகையில் மாணவ இயக்கங்கள் பல்வேறிடங்களிலும் ஸ்தாபிக்கப்படும். மாணவ உரிமை மகாநாட்டில் பல முக்கிய பிரமுகர்களின் சொற்பொழிவுகள் இடம்பெறுமெனத் தெரிகிறது.

### கந்தசாமி தினம்

### அரசாங்க ஊழியர் மௌனம் அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு, ஞாயிறு

தியாகி கந்தசாமியின் நினைவு குறித்து மட்டக்களப்பு பகுதியில் உள்ள பெரும்பாலான அரசாங்க அலுவலகங்களில் காலை பதினொரு மணிக்கு இரண்டு நிமிட நேர மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. அரசாங்க லிகிதர் சங்கம் மட்டு நகர் கிளையின் சகல அலுவலகங்களிலும் மௌனம் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

# தேசிய நூலக வாரம்

— க. மாணிக்கவாசகர் —

(செயலாளர், யாழ். நூலகர் சங்கம்)

'தேசிய நூலக வாரம்' என்பது இந்நாட்டில் வாழும் சிறியவர் முதல் முதியவர்வரை தங்கள் வாழ்நாள் முழுவதும் நூல்களை விரும்பிவாசிக்கும் பழக்கத்தை ஊக்குவித்து இந்நாட்டிலுள்ள பலவகையான நூலகங்களுக்கும் மிகுந்த ஆதரவைத் தந்து மேலதிக பலனைப் பெறச் செய்வதற்குமான ஒரு தீவிர எழுச்சியாகும்.

இம்முயற்சி இந்நாட்டிற்கு புதியது. ஐக்கிய அமெரிக்க நாட்டில் இம்முறை ஏழாவது முறையாக தேசிய நூலகவாரம் கொண்டாடப்பட்டது. நூலகத் துறையில் நிமிடத்துக்கு நிமிடம் புதிய கருத்துக்களை நடைமுறைக்குக்கொண்டுவந்த அறிஞன் மெல்வில் டியூயியின் விடா முயற்சியால் அந்நாட்டில் நூலகங்களின் எண்ணிக்கை 13,000க்கும் அதிகமாகிவிட்டது. சுமார் 15,000 தகுதிவாய்ந்த நூலகர்கள் சேவையிலிருக்கிறார்கள் அமெரிக்க நூலகச் சங்கத்தின் அங்கத்தவர் தொகை 20,000த்தை கடந்து விட்டது. இத்தகைய மாபெரும் அமைப்பின் பயனாக அந்நாட்டில் தேசிய நூலக வாரக் கொண்டாட்டங்கள் ஜனாதிபதியின் செய்தியுடன் ஆரம்பித்து விமரிசையாக நாடெங்கும் நடைபெறுகின்றன.

இந்தியாவில் நூலக மேதையான டாக்டர் சீ. ரா. ரங்கநாதனின் பெருமுயற்சியால் மிகக் குறுகிய காலத்தில் நூலகச் சேவை பரந்து வளர்ந்துவிட்டது நூலக வாரக்கொண்டாட்டங்கள் சர்வ சாதாரணமாகி விட்டன.

டாக்டர் ரங்கநாதனின்மாணவரும் நெருங்கிய நண்பருமான காலஞ் சென்ற கே. செல்லையா ஈழநாட்டிலும் இத்தகைய நூலகச் சேவையை அமைக்க அல்லும் பகலும் உழைத்து வந்தார் இன்று அவரது முயற்சி வெற்றி காண்கின்றது. முதல் முயற்சியாகிய இத் தேசிய நூலக வாரத்தில் நூலக சேவையைப் பற்றிய சில தவறான கருத்துக்களை விலக்குவது அவசியமாகிறது. தமிழில் புதிய சொற்களை ஆக்கும் முயற்சியில் "லைபிறரி" என்ற சொல்லுக்கு புத்தகசாலை, வாசிகசாலை, நூல் நிலையம் என்றும் "லைபிறேரியன்" என்ற சொல்லுக்கு நூல் நிலையப் பாதுகாப்பாளர், பொறுப்பாளர், அதிகாரி, அதிபர், நிர்வாகி எனப் பல பதங்கள் பிரயோகப்படுத்தப்படுகின்றன. இவைகளில் ஒன்றுவது பொருத்தமுடையதாகாது. Library, Librarian ஆகிய பதங்களுக்குச் சரியான பொருளுடைய தமிழ்ச் சொற்கள் நூலகம், நூலகர் என்பவைகளாகும்.

முன்சொன்ன தேசிய நூலக வார விளக்கத்தில் சிறியவர் வாசித்தல், முதியவர் கற்றல், பலவகையான நூலகங்கள் ஆகிய கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன. இவைகளில் மூன்றுவது அம்சத்தை விளக்குமிடத்து ஏனையவை ஓரளவுக்கு அடங்குமென நம்புகிறேன்.

எங்கள் நாட்டில் பலவகையான நூலகங்கள் இல்லாததால் ஒரு சில சன சமூக நிலையங்களையும், கல்லூரி நூலகங்களையும் மாத்திரமே நூலக உலகம் எனக் கருதுகிறார்கள். ஒரு நூலகம் எப்படிப்பட்டதென்பதைக் காண்பிப்பதற்கு யாழ்ப்பாணத்தில் அமெரிக்க தகவல் நிலையம் ஒன்று மாத்திரமே இருக்கின்றது. துர் அதிர்ஷ்ட வசமாக அங்கிருக்கும் நூல்களும் ஏனைய கல்விச் சாதனங்களும் ஐக்கிய அமெரிச்க நாட்டைப் பற்றியதாகவே இருக்கின்றது. இங்கிருக்கும் நூலகப் பொருட்கள் அனைத்தும் அமெரிக்காவிலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டதாகையால் இவைகளில் உயர் தரத்தைக் காணலாம்.

நூலகங்கள் சிறுவர் நூலகம், பாடசாலை நூலகம், உயர்தரக் கல்லூரி நூலகம் பொதுசன நூலகம், தொழில்நுட்ப நூலகம் எனப் பலவகைப்படும். இந்நூலகங்களில் உள்ள நூல்கள் பலதரத்தனவாகவும் இருக்கும். சிறுவர் நூல்களை விரும்புபவர்கள் தொழில்நுட்ப நூலகத்திற்குப் போக மாட்டார்கள். வைத்திய நூல்களையாவது பொறியியல் நூல்களையாவது சிறுவர் நூலகத்திற் காணமுடியாது. இவ்வாறே இதன் நூலகர்களும் வெவ்வேறு கல்வித் தராதரங்களை உடையவர்களாக இருப்பர். ஆயினும் பொதுசன நூலகம் ஒரு தனி உலகம். அது பொதுமக்களின் சர்வ கலாசாலை. சிறுவர்களும், வயோதிபர்களும், தொழில்நுட்ப நிபுணர்களும் ஒருங்கு சேருமிடம்.

துர்அதிர்ஷ்டவசமாக எங்கள் நாட்டிலுள்ள கல்விமான்களும், ஆட்சியாளரும், தரமுள்ள நூல்களைப் பார்வையிடாததாலோ, கேள்விப்படாததாலோ அல்லது அவைகளின்பயனைத் தெரிந்திராததாலோ நூலகச் சேவையைப் பற்றி எவ்வித அக்கறையும் அற்றவர்களாக இருக்கிறார்கள்.

'கற்றதனைத்து ஊறும் அறிவு' என்பது வள்ளுவர் வாக்கு. அனைத்தையும் கற்பதற்கு உகந்த இடம் நூலகம் மாத்திரமே என்பதை அதிகமாக வற்புறுத்தத்தேவையில்லை. கடந்த கால்நூற்றாண்டுக் காலத்தில் நூல்களின் எண்ணிக்கை கடுகெதி விரைவில் வளர்ந்துவந்துள்ளது. அச்சிடும் முறையில் முன்னேற்றமும்மாற்றமும் நிகழ்ந்துள்ளன. தனிப்பட்டவர்கள் வாங்கக்கூடியதாக குறைந்த விலையில் பெருந்தொகையான நூல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன இங்கிலாந்தில் குறைந்த விலையில் அச்சிடப்படும் நூல்களை விநியோகிக்கக்கூடாது என்றுகூட எதிர்ப்பு உண்டாகியது. இதன்காரணம் மக்களின் வாங்கும் சக்திக்கேற்ப நூல்களை அங்சிட்டு அவைகளை வாங்கி மக்கள். படித்துப்பயன் படவேண்டுமென்ற பெருநோக்கமாகும்.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் தோன்றிய ரங்கநாத சித்தாந்தம் இன்றும் பயன் தருகிறது. "பயன்படுவதற்கே நூல்கள்" என்பது அந்தச் சித்தாந்தத்தின் முதற் சட்டம். யாழ். நூலகர் சங்கத்தினர் நடத்தும் தேசிய நூலக வாரத்தில் நூலகங்கள் நூல்களை எவ்விதத்தில் பயன்படச் செய்கின்றன என்பதைப் படக்காட்சிகள் மூலம் விளக்க எத்தனிக்கின்றனர்.

## நேருமறைவுக்கு மாணவர் மன்றம் அனுதாபம்

உடுப்பிட்டி, ஞாயிறு

உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி சிரேஷ்ட மாணவர் மன்றத்தினரால் இந்தியப் பிரதமர் நேருவின் மறைவு குறித்து விசேஷ அனுதாபக் கூட்டமொன்று திரு. க. நீலகண்டன் தலைமையில் நடாத்தப்பெற்றது.

தலைவர் தமது உரையில் "சமாதானத்தின் காவலனும், சுதந்திரத் தியாகியும், நவ பாரதத்தின் சிற்பியும், நடுநிலைமைக் கொள்கையின் தந்தையும், ஆசியாவின் ஜோதியுமான பண்டித நேருஜி மறைந்துவிட்டார். இன்னுமொரு ஆசியஜோதி நம்மத்தியில் என்று தோன்றும்" என்று குறிப்பிட்டார்.

நேருஜியின் மறைவுக்கு அனுதாபத் தீர்மானத்தைப் பிரேரித்துப் பேசிய செயலாளர் திரு. சி. தில்லைநடராசா, "சொல்லிலும் செயலிலும் அன்பொழுக வாழ்ந்த செயல் வீரர் நேருஜியின் மறைவு ஈடுசெய்யமுடியாதது" என்று கூறினர்.

திரு. ஜே. ஜெயக்குமார் பேசுகையில் கென்னடியை இழந்தோம், நேருஜியையும் இழந்துவிட்டோம். இவ்விருவர்தம் மறைவும் சமாதானத்திற்கு இரு பேரிடிகளாகும் என்று குறிப்பிட்டார்.

திருவாளர்கள் இ. முத்துரத்தினானந்தன், மு. சுப்பிரமணியம் ஆகியோரும் பேசினர்.

இறுதியில் இரு நிமிடங்கள் மௌன அஞ்சலி நேருஜியின் ஆத்ம சாந்திக்காக அனுஷ்டிக்கப்பட்டது. அனுதாபத் தீர்மானம் இந்திய ஸ்தானிகர் திரு. கே. கபூருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

•

உரும்பராய், ஞாயிறு

உரும்பராய் ஞானோதய வாசிகசாலையின் சங்க அங்கத்தவர் கூட்டம் சென்ற வெள்ளிக்கிழமை சங்கத் தலைவர் திரு. க. குலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் மறைந்த பாரதப் பிரதமர் திரு. ஜவஹர்லால் நேருவிற்கு அனுதாபம் தெரிவிப்பதற்காகக் கூட்டத்தில் ஐந்து நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. பின்னர் பிரதமரின் புதல்வி இந்திராகாந்துக்கு ஓர் அனுதாபச் செய்தியனுப்பி வைக்கப்பட்டது.

"பாரத ஜோதியின் மறைவு பாரதநாட்டுக்கு மட்டுமின்றி, இப்பரந்த உலகிற்கே ஒரு பெரும் நஷ்டமாகும். இதற்குத் தங்களின் தளராத மன உறுதி வேண்டும்" என்று அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மாத இறுதியில் சங்க அங்கத்தவர்களால் மேற்படி வாசிகசாலை மண்டபத்தில் பேச்சுப்போட்டி, சங்கீதப் போட்டி, நாடகப்போட்டி முதலியன வைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## சண்முகதாசன் யாழ்ப்பாண விஜயம்

உடுப்பிட்டி, ஞாயிறு

இம்மாதம் 12-ம், 13-ம், 14-ம் திகதிகளில் இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியின் தேசிய அமைப்பாளரும் தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளருமான திரு. நா. சண்முகதாசன் வடபகுதிக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

பரந்தன், இரசாயனத் தொழிற்சாலை, காங்கேசன் சீமெந்துத்தொழிற்சாலை, பீடித் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றிற்கு விஜயம்செய்து விசேஷ சொற்பொழிவுகள் நிகழ்த்துவார். 14-6-64 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4 மணியளவில் யாழ். நகரமண்டபத்தில் "இடதுசாரிகள் பாதை எது?" என்பது பற்றி பகிரங்க சொற்பொழிவொன்றும் நிகழ்த்துவார்.

இறுதியில் நெல்லியடி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்டிருக்கும் விசேஷ பொதுக்கூட்டத்திலும் கலந்துகொள்வாரெனத்தெரிகிறது.

## ஆயுர்வேத மூலிகை ஆலோசனைச்சபை

நல்லூர், திங்கள்

இலங்கையில் பயிராகும் ஆயுர்வேத மூலிகைகளைப்பாதுகாத்தல், பயிரிடுதல், பாவித்தல்,வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்தல் ஆகியவற்றை ஏற்ற முறையில் நடத்தும்வகையில் ஆயுர்வேத மூலிகை ஆலோசனைச்சபை யொன்று நிறுவப்பட்டுள்ளது.

ஆயுர்வேத அதிகாரியைத் தலைவராகவும் விவசாயப் பகுதி, வன இலாகா, காணி, காணி அபிவிருத்தி குடிசைக் கைத்தொழில் பகுதிகளின் பிரதிநிதிகளை அங்கத்தவர்களாகவும்கொண்ட ஒரு விசேஷ குழு சுகாதார அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளது.

## நிதிதிரட்டுவதில் மோசடி

நல்லூர், திங்கள்

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் அரசாங்கத்தின்மொழிக் கொள்கைக்கு எதிராக எடுக்கவிருக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் பலர் பணம் சேகரிக்க ஆரம்பித்துள்ளனர். இதுவிஷயத்தில் பொதுமக்கள் கவனமாக இருக்கவேண்டுமென எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு. செ. கோடீஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

திரு. கோடீஸ்வரன் விடுத்துள்ள ஓர் வேண்டுகோளில் எழுதுவினைஞர் சங்கத்திற்கு தமிழ்பேசும் மக்களின் பூரண ஒத்துழைப்பு வேண்டுமெனவும் நிதிசேகரிக்கும் விஷயத்தில் போலிகளைக்கண்டு ஏமாற வேண்டாமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3 Shows. Sats & Suns Four
1001 Magic Thrills!!
Guy Williams
IN
Captain Sindbad
( Wondrascope - Technicolor )

இப்பொழுது திரையிடப்படுகிறது !

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

ராஜ் (நீர்கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-30

ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) ஜூப்பிட்டர் (குருநாகலை) தாஜ்மஹால் (கல்முனை)

எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி
ராதா - ராஜன் - புஷ்பலதா
நடிக்கும்



முருகன் பிரதர்ஸ்

நானும் ஒரு பெண்

இந்திய ஜனாதிபதியின் வெள்ளிப்பதக்கம் பெற்ற சிறந்த சித்திரம்.

புன்னகை பூத்திருங்கள்!




கழுவக்கூடிய சூப்பர் குயிங்க் ரோயல் புளூ மை கொட்டுண்ட புடவைகளையும் துணிமணிகளையும் பொறுத்து கவலையே கொள்ளாதீர்கள். ஏனெனில் இந்த மை தான் பாடசாலைக்கும் வீட்டுப் பாவனைக்கும் உகந்த மை. காரணம் மை பட்ட உடைகளைக் கழுவி அலசியதும் கறைகள் முற்றாய் மறைந்து விடுகின்றன.

இது சரு
பார்க்கர் பேனா
கம்பனியின் உற்பத்தி

உலகைனரால் அதிகமாக நாடும் பேனைகளைத் தயாரிக்கும் ஸ்தாபனத்தினர்.

SCHOOL OF TECHNOLOGY, JAFFNA.
SCHOLARSHIPS

Two free Scholarships valued at Rs. 50-00 per month each are avilable to POOR STUDENTS with qualifications suitable for completing any of the following one year courses:

(a) Electrical Engineering practice Intermediate (City & Guilds, London)
(b) Electrical Engineering Practice Preliminary (City & Guilds, London)
(C) Authorised Draughtsmens' Examination (Surveyor General)

Applications are invited before 10-6-64. For further particulars, apply to:

"Citadel"
Chundikuli, Jaffna. Director.
3-6-64.

## பஸ்சேவை சீர்கேடு

நல்லூர், திங்கள்

யாழ்ப்பாணத்திலுள்ள பல பாதைகளிலும் சேவையிலீடு பட்டுள்ள பஸ்களில் பெரும்பாலானவை கடந்த சில தினங்களிற் பழுதடைந்துவிட்டன. இதனல் மோசமான நிலையிலிருந்த பஸ்சேவை மேலும் பொதுமக்களுக்கு அவதியையும் கஷ்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

வடபகுதிப் பாதைகளில் சேவையிலீடுபட்டுள்ள 126 பஸ்களின் நாளுக்குக் குறைந்தது ஐந்து பஸ்கள் வீதம் பழுதடைவதாகவும் இதனல் பஸ் சேவை ஒழுங்காக நடைபெற முடியாமலிருப்பதாகவும் இ. போ. ச. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பழுதடைந்து திருத்தப்பட்ட பஸ்கள் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும்போது பாதைகளில் நின்றுவிடுவதனல் பிரயாணிகள் வெயிலில் வாடி வதங்கும் பரிதாபக் காட்சியைக் காணக்கூடியதாகவுள்ளது. பலமணி நேர இடைவெளிக்குப் பிறகு புறப்படும் பஸ் முதலாவது அல்லது இரண்டாவது பஸ் நிறுத்துமிடத்தில் நிரம்பிவிடுவதனல் மற்றைய பஸ் நிறுத்துமிடங்களில் நிற்கும் பிரயாணிகள் அந்த பஸ்களில் இடம் கிடைக்காது கால் கடுக்க நிற்கவேண்டியுள்ளது.

## சமயப்போட்டி

சுழிபுரம், ஞாயிறு

வழக்கம்பரை சனசமூகநிலையத்தினர் வழக்கம்பரை அம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு குழந்தைகளுக்கு சமய அறிவை ஊட்டும்வகையில் சமயசம்பந்தமான போட்டி ஒன்றை நடத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளை செய்துவருகின்றனர். போட்டியில் வெற்றியடைபவர்களுக்கு தேர்த்திருவிழாவில் அன்று பரிசில்கள் வழங்கப்படும். போட்டிக்கேள்விகள் புத்தக உருவில் சுழிபுரம் கிராம சபைக்குட்பட்ட 15 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு பாடசாலை ஆசிரியர் மூலம் விநியோகிக்கப்படும்.

## மகளிர் கல்லூரி விளையாட்டுப் போட்டி

உடுப்பிட்டி, ஞாயிறு

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டி இம்மாதம் 13-ந் திகதி நடைபெறவிருக்கிறது.

## வருடாந்த விளையாட்டு போட்டி

உடுப்பிட்டி, ஞாயிறு

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி இல்லங்களுக்கிடையே நடைபெறும் வருடாந்த விளையாட்டுப்போட்டிகள் இம்மாதம் 27-ந் திகதி நடைபெறவிருக்கின்றது.

## வானொலி நிகழ்ச்சிகள் கொழும்பு

**திங்கள் (8-6-64)**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 திரை இசை, 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 7-15 பாட்டு - லக்ஷ்மி நடராஜன், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 தேர்ந்த இசை, 9-30 தமிழ்மூலம் சிங்களம் (மறு ஒலிபரப்பு), 9-45 வாத்திய இசை, 10-00 நேயர்விருப்பம்.

# "எனது இலக்கிய இரசனையைப் பகிரங்கப் படுத்தியவர்"

## இரசிகமணிக்குப் பண்டிதமணி பாராட்டு

யாழ்ப்பாணம், திங்கள்

"திருவள்ளுவர் என்கின்ற கற்பக தருவிலே கனிந்திருக்கின்ற கனிகளிலே 'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன் மகனைச் சான்றேன் எனக் கேட்டதாய்' என்ற குறளும் ஒன்று. இந்தக் கனியிலே 'உவகை' என்றவித்து அமைந்திருக்கிறது. 'உவகை' என்ற இந்த வித்தை கவிச்சக்கரவர்த்தி கம்பன் ஒரு சற் பாத்திரத்திலே ஏற்றி, வேண்டிய பக்குவஞ் செய்து வளர்த்துக் காட்டுகிறன்.

கம்பன் எடுத்துக் கொண்ட சற்பாத்திரம் தசரதச் சக்கரவர்த்தி. சக்கரவர்த்திக்கு வெகுகாலம் பிள்ளை இல்லை. ஸ்ரீராமனைப் புத்திரனகப் பெற்றதும் அவனுக்குப் பெரிய உவகை உண்டாகி விட்டது. யாராலும் வளைக்க முடியாத வில்லை ஸ்ரீராமன் வளைத்தான் என்றறிந்த போதோ, அந்த உவகை அளவு கடந்துபோய் விட்டது.

இப்படி வளர்ந்த உவகை ஒரு சந்தர்ப்பத்திலே வாடி, வதங்கிக் கருகிப் போனது. பரசுராமன் வந்தான்; தசரதன் தரைமட்டம் ஆனன். ஸ்ரீராமனுக்குப் பரசுராமன் தோற்றேடி விட்டான் என்பதைத் தெரிந்து கொண்டதும் தசரதச் சக்கரவர்த்தி 'பெற்றவன்றினும் பிஞ்ஞகன் பிடித்தவில் இறறவன்றினும் பெரியதோர் உவகை பூத்தான்'. உவகைப் பெருக்கில் எங்கேதசரதனுக்கு உயிர் போய விடுமோ என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. இந்த உவகைகளுக்கெல்லாம் பிரையிடவும் காணத உவகை பின்னெரு சந்தர்ப்பத்திலேதசரதச் சக்கரவர்த்திக்கு ஏற்பட்டது. 'கற்றவர் கற்றிலாதவர் அனைவரும் ஸ்ரீராமனைக் கண்ணகக் கருதுகிறர்கள்' என்றுவிஸ்வாமித்திரன் ஸ்ரீராமனைப் பாராட்டினன். 'உன்னுடைய மகன் சான்றேன்' என்று ஜனநாயக உலகமல்ல, ஒரு சான்றேன் கூறத் தசரதன் உவகை பூத்தான். 'உவகை'யைப் பற்றி இப்படியொருகம்பராமாயணப் பிரசங்கம் யான் ஏன் செய்ய வேண்டும்? என்னுடைய உவகையைச் சற்றே தணித்துக் கொள்வதற்காகவேதான். கனக. செந்திநாதன் இளமையில் என்னிடம் படிக்கும் போதே 'இரசிகர்' என்பதை அறிந்தேன். இன்று அவரது இரசிகத்தன்மை வளர்ந்து அவரைப் பலரும் பாராட்டும் நிலைமை ஏற்பட்டிருப்பதைப் பார்க்கும் போது அளவுகடந்த உவகை எனக்கேற்படுகிறது"

இவ்வாறு தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மண்டபத்தில் இரசிகமணி கனக. செந்திநாதனைப் பாராட்டுமுகமாக இலங்கை எழுத்தாளர் சங்கம் நடத்திய விழாவிலே பேசும்போது பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை கூறினர். விழாவுக்கு திரு. சீ. ஸ்ரீநிவாசன் தலைமைதாங்கினர்.

பண்டிதமணி தொடர்ந்து பேசியதாவது:

"வித்துவ சிரோன்மணி பொன்னம்பல பிள்ளையை இரசிகசிரோரத்தினம் என்று பலரும் பாராட்டுவார்கள். சீவகசிந்தாமணியை முதன் முதல் பதித்தபோது உ. வே. சாமிநாதையர் ஒரு பிரதியைப் பொன்னம்பல பிள்ளைக்கு அனுப்பி 'பாற்கடலின் ஆழம் மந்தரமலைக்கு தெரியுமேயன்றி வேறெந்தமலைக்குந் தெரியாது அதுபோலச் சீவகசிந்தாமணியின் ஆழம் உங்களுக்குத் தான் தெரியும். ஏதோ ஒருவாறு நான் பதிப்பிக்கிருக்கிறேன். தாங்கள் அங்கீகரித்துக்கொள்ளவேண்டும்' என்று ஒரு கடிதமும் எழுதியிருக்கிறர். இப்படிச் சாமிநாதையர் எழுதுவாரேயாஞல் பொன்னம்பல பிள்ளையின் சிந்தாமணி இரசனை எப்படி இருக்குமென்பது சிந்திக்கத்தக்கது. ஆனல் கந்தபுராண, பெரியபுராண இரசனைக்குரிய இந்த நாட்டிலே சீவகசிந்தாமணி ரசனையை வெளிப்படையாக வித்துவசிரோமணி வைத்துக் கொள்ளவில்லை. இதேபோல யானும் எனது இரசனைகளை இரகசியமாக வைத்துக்கொண்டேன். ஆனல் கனக. செந்திநாதனே எனது இரசன உலகத்துள் உத்தரவின்றி உட்பிரவேசித்து எனது இரசனையைப் பகிரங்கப்படுத்திவிட்டார்."

பன்னிரண்டு சங்கங்களின் சார்பில் இரசிகமணிக்கு பாமாலைகளும், பூமாலைகளும் சமர்ப்பிக்கப்பட்டன. திருவாளர்கள் பண்டிதர் பொ. கிருஷ்ணன், தெ. து. ஜயரத்தினம் ஆகியோரும் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் பாராட்டுரை வழங்கினர். சன்மார்க்க நாடக சபையினரின் 'நிறைகுடம்' என்ற நாடகமும், மாவை முத்தமிழ் மன்றத்தாரின் 'அண்டல் ஆறுமுகம்' என்ற நாடகமும் விழாவின் நாடக அரங்கில் இடம்பெற்றன.

## நேருவின் அஸ்தி.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

5 மணிக்கு அவரது பிறந்த ஊரான அலஹாபாத்துக்கு வந்து சேர்ந்தது.

நேற்று பகல்11-30க்கு ரயில் அலிகாருக்கு வந்து சேர்ந்தபோது, வழிநெடுக சுமார் 80 மைல் தூரத்திலும் மக்கள் ஜனசமுத்திரம் போல் கூடியிருந்தார்கள் என ரயிலில் சென்ற நிருபர்கள் அறிவித்தனர். அலிகாரிலிருந்து அலஹாபாத்துக்கு வரும் வழிநெடுகிலும் இதே போன்ற ஜனக் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்ததாயும், இந்தியா முழுதும் ஒரே இடத்தில் திரண்டு வந்திருப்பது போல் அது தென்பட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

அலிகாரில் லட்சோப லட்சம் மக்கள் கண்களில கண்ணீர் பெருக "ஜவஹர் அமரராகி விட்டார்" என கோஷித்தனர். வழிநெடுக ரயிலில் பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கிகளின் மூலம் ராம்துன் பஜனை கேட்டுக்கொண்டிருந்தது.

சென்னையில் நேற்றுப் பகல் வரை 5 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் அஸ்தியைத் தரிசித்தனர். பின் விசேஷ ரயிலில் அது திருநெல்வேலிக்கும், அதன்பின் கார் மூலம் கன்னியாகுமரிக்கும் எடுத்துச் செல்லப்பட்டது. இன்றிரவு 9-30க்கு குமரிக்கடலில் அஸ்தி கரைக்கப்பட்ட நேர்முக வருணனையின் ஒலிப்பதிவை சென்னை, திருச்சி நிலையங்கள் ஒலிபரப்பும்.

## நாட்டிலும் நகரிலும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடா, இனியாவது வீடு பேய்ச் சேரலாம்' என்ற நிம்மதியுடன் இருக்க, பஸ் போய் ஒரு ஷெட்டுக்குள் நுழைந்தது. எண்ணையடித்தார்கள். மெக்கானிக் ஒருவர் வந்து 'எழும்பும் காணும்' என்றர். எழும்பினேன். என்ஜின் ஒயில் விட்டார் அவர். இதிலே கால் மணி நேரம் ஆயிற்று.

பெட்ரோலும் எண்ணையும் ஏற்கனவே நிரப்பியிருக்கலாகாதா? முட்ட முட்ட பிரயாணிகளை ஏற்றிக் கொண்ட பிறகுதான இந்த வேலையைச் செய்யவேண்டும்?

பஸ்ஸுக்குள்ளே ஒருவர் பத்திரிகை ஒன்றைப் புரட்டினர் அதில் இ. போ. ச.வுக்கு 1962-ம் ஆண்டில் 40 லட்சம் ரூபா லாபம் என்ற செய்தியைப் பார்த்தபோது வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சியது போலிருந்தது. என்னையா, இவ்வளவு லாயம் அடித்துக் கொண்டும் பிரயாணிகளை இப்படிப் போட்டு மாய்க்கிறீர்களே!

--வழிப்போக்கன்


## கேள்வி விளம்பரம்

கிராமசபை — புங்குடுதீவு

**ஆலம்புலம் சிறிய கொண்டல் ஒழுங்கை**

புங்குடுதீவு கிராம சபை அக்கிராசனர் அவர்களால் 1964ம் ஆண்டு ஆனி மாசம் 13ம்திகதி சனிக்கிழமை காலை 9 மணிவரை டி வேலைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்த காரர்களிடமிருந்து 'சீல்' வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். ரூபா 35-00 (முப்பத்தைந்து) கட்டி 11-6-64 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிவரை கேள்விப்பத்திரங்கள் புங்குடுதீவு கிராம சபையில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரத்திற்குக் கட்டிய பணத்தில் ரூபா 5-00 (ஐந்து) திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது. விபரங்களை புங்குடுதீவு கிராமசபை அலுவலகத்திலும், உள்ளூராட்சிஉதவி அதிபர் (வட மேல் பிரதேசம்) யாழ்ப்பாணம் அவர்கள் அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

இன்னும் இரு நன்கொடை வேலைகளுக்கும் கேள்விப்பத்திரங்கள் வரவழைக்கப்படுகின்றன.

இங்ஙனம்,
சி. கு. அம்பிகைபாகன்
கிராமசபை அலுவலகம்,
புங்குடுதீவு. 1-6-1964.
395

## மானிப்பாயில் 14 துண்டுக்காணிகள் ஏலவிற்பனை

ஆனைக்கோட்டையிலுள்ள ஆனைக்கோட்டை மடத்தின் தர்மகர்த்தாக்களின் உத்தரவுக்கிணங்கவும் இலக்கம் T R 43-ன் வழக்கின் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் அனுமதியின் பேரிலும் 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 12-ம் திகதி வெள்ளிக்கிழமையும் 13-ம் திகதி சனிக்கிழமையும் மானிப்பாயிலுள்ள முதலியார் கனகசபை வீதியில், மானிப்பாய் கிராமசபை அளவைப்படி 3 பரப்பு முதல் 6 பரப்புவரையிலான 14 துண்டுக் காணிகள் என்னல் ஏலத்தில் விற்பனை செய்யப்படும். ஏலவிற்பனைகள் தினமும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

இது சம்பந்தமான மேல்விபரங்களை குறிப்பிட்ட ஏலவிற்பனை பற்றிய துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும் அல்லது யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள 19, செட்டிவீதியிலுள்ள புரக்டர் திரு. சி. நி. குமாரசுவாமி மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

ரி. செல்லையா,
ஏலவிற்பனையாளர்,
37, கொழும்புத்துறை றேட்,
கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம்,
20 மே 1964. 383


## சாரணர்களின் சிரமதான வேலைகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி சாரண மாணவர்கள், கல்லூரி சாரண ஆசிரியர் திரு. கா. அரிச்சந்திரா தலைமையில் சிரமதான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள். சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் ஓய்வுநேரங்களில் பொது நிலையங்கள், கோயில்கள் ஆதியன துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள்.

இதுபற்றி திரு. கா. அரிச்சந்திராதெரிவிக்கையில், மாணவர்கள் தாமாகவே சிரமதான முயற்சியில் மனமுவந்து ஈடுபட்டிருக்கிறர்கள் என்றும் மலசல கூடங்கள் அமைத்தல், கல்லூரியில் நிறுவப்படும் புதிய கட்டடத்தின் அமைப்பு வேலைகளில் ஒத்துழைத்தல், றேட்டுகள் செப்பனிடல் முதலியவற்றில் தொடர்ந்து ஈடுபடுவர்கள் என்றும் கூறினர்.


## வரி விளம்பரம்

**கபிரியேல் தயாரிப்புகள்**

1. **கபிரியேல் பெயின் ஒயில்**

சகல நோவு, வீக்கம்,வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. **கபிரியேல் ஒயின்மென்ற**

சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.

3. **கபிரியேல் ஸ்பெஷல் பாம்**

தடிமன், தலையிடி, சந்துளைவு போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள் :
கபிரியல்வைத்தியசாலை,சுன்னகம்
GABRIELS,Chunnakam. 278

## நன்றி நவிலல்

சேர். வை. துரைசுவாமியின் சகோதரன் மலாயா, இலங்கை மண்டபம்காம், முதலிய இடங்களில் பொறியியல் நிபுணராக (Engineer) கடமையாற்றி, இளைப்பாறிய வை. போ. இராஜகோபால் அவர்கள் பரகதி அடைந்த தினத்தில் சமூகமளித்தும் அன்னரின் கிரிகைகளின் போதும் கலந்துகொண்ட நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் எம் நன்றியைப் பணிவுடனும் அன்புடனும் தெரிவிக்கின்றேம்.

இராஜகோபாலின் பாரியார், பிள்ளைகள், மருமக்கள்.
'சாந்தி நிகேதனம்', 6,மகாத்மா காந்தி வீதி, யாழ்ப்பாணம்.
482

## விற்பனைக்கு

C. V. 4000 சீரிஸ் பெட்போர்ட் குட்ஸ் வான் உடனடியாக விற்பனைக்கு இருக்கின்றது. நல்ல நிலையிலிருக்கிறது. T. T. இரட்ணம், 76-A, டெம்பிள் றேட், யாழ்ப்பாணம். 491

## தேவை

தேசியசுவிப் வீடுவிட்டாகவோ கூட்டங்கள் உள்ள இடங்களுக்கோ கொண்டு திரிந்து விற்பதற்கு யாழ்ப்பாணக் குடாநாடு பூராவும் கிராமத்திற்கு ஒரு ஆள் தேவை. ரூ.100/- கட்டுப்பணத்துடன் நேரில் சமுகமளிக்கவும், கொழும்பு பிளான் ஜுவலறி கவுஸ், நல்லூர்யாழ்ப்பாணம், தொலைபேசி: 461.
493.


## யமனுக வந்த மீன்

யாழ்ப்பாணம், திங்கள்

குளத்தில் ஒருவர் நீராடிக்கொண்டிருக்கும் பொழுது எதிர்பாராத விதமாக ஒரு மீன் அவரின் வாய்க்குள் நுழைந்து பின் அவரின் உயிருக்கே உலைவைத்த சம்பவம் ஒன்று மட்டுவிலில் நிகழ்ந்துள்ளது.

புத்தூரிலுள்ள வாதரவத்தை என்னும் இடத்தைச் சேர்ந்த 32 வயதுள்ள தம்பையா கணபதிப்பிள்ளையின் மரணம் குறித்து அவரின் சகோதரர் நடராஜா விசாரணையின்போது சாட்சியமளிக்கையில் இருவரும் வேலைவிட்டு வரும்பொழுது மருதடிக் குளத்தில் குளித்ததாகவும், தமதுசகோதரர்தனது தொண்டையைக் காட்டி எதையோ சொல்லவே தாம் அவரின் தொண்டையைப் பார்த்தபோது மீனின் வால் தென்பட்டதென்றும் உடனடியாக யாழ்ப்பாணம்ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்ததாகவும் தெரிவித்தார். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதும் கணபதிப்பிள்ளை மரணமானர். பிரேத பரிசோதனையை டாக்டர் சிவஞானசுந்தரம் நடத்தினர். அந்த மீன் மூச்சுக்குளாய்க்குள் அப்படியே இருந்ததுமரணவிசாரணை நடத்திய திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விபத்தினல் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

# உள்ளூராட்சி உத்தியோகத்தர் சிலருக்கு சிங்கள நிபந்தனை இல்லை

## ஸ்தல ஸ்தாபனக் கமிஷனர் அறிவிப்பு

நல்லூர், திங்கள்

"உயர் தொழிலுக்குரிய' தொழில்நுட்பத்திற்குரிய' விஞ்ஞானத்துக்குரிய தொழில்கள் என்று பிரகடனப்படுத்தப்பட்ட பதவிகளில் உள்ளவர்களும் 60-ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம் திகதிக்கு முன் நியமனம்பெற்றவர்களுமான உத்தியோகத்தர்கள் சம்பள உயர்ச்சிக்கு வேண்டிய தகைமையான சிங்களப் பரீட்சையில் சித்தியடையவேண்டுவதில்லை" என்று உள்ளூராட்சி சேவை அதிகார சபைத் தலைவர் திரு. ட்பிள்யு. டி. வி. மஹாதந்தில உத்தியோக கரும மொழிச்சட்டத்தை அமுல் நடத்துவது சம்பந்தமான நிபந்தனைகள் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

உத்தியோக மொழிச்சட்டத்தை அமுல்நடத்துவதுபற்றிய திருத்தப்பட்ட பின்வரும் நிபந்தனைகளை உள்ளூராட்சி சேவை அதிகாரசபை அங்கீகரித்துள்ளதாகவும் திரு. மஹாதந்தல அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

திருத்தப்பட்ட நிபந்தனைகள் வருமாறு:

1962-ம் ஆண்டு நவம்பர் மாதம் 9-ந் திகதி வெளியிடப்பட்ட உத்தியோககருமமொழிச் சட்டத்தை அமுல் நடத்துவது சம்பந்தமான நிபந்தனைகளின் ஏற்பாடுகளின் கீழ் வேதனப்பெருக்கு இடைநிறுத்தப்பட்டு அல்லது பூரணமாக நிறுத்தப்பட்டிருந்தால் சிங்களத் தேர்வும் பரீட்சைகள் ஏதேனுமொன்றில் சித்தியடைந்திராவிட்டாலும் அப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தால் சம்பள உயர்ச்சி அந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படலாம். இவ்வாறு வேதனப் பெருக்கு கொடுக்கப்பட்ட ஊழியர்களில் சிங்கள உத்தியோகத்தர்கள் 1967-ம் ஆண்டுக்கு முன்னரும், சிங்களவரல்லாத உத்தியோகத்தர்கள் 1968-ம் ஆண்டுக்கு முன்னரும் சிங்களத்தில் மூன்ருவது தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

உரிய தேர்ச்சிப் பரீட்சைக்கென கூறப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் சிங்களப் பரீட்சையில் சித்தியடையத் தவறிஞல் குறிப்பிட்ட காலத்தின் பின்னுல் உடன் சம்பள உயர்வு இடை நிறுத்தப்படும். பரீட்சையில் சித்தியடையும் காலம்வரை சம்பள உயர்வு பூரணமாகவும் நிறுத்தப்படலாம்.

குறிக்கப்பட்ட காலத்திற்குள் மூன்ருவது தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையத் தவறிஞல் குறிப்பிட்ட காலப் பகுதியின் பின் உள்ளூராட்சி சேவை அதிகாரசபையினுல் கட்டாயமாக இளைப்பாறச் செய்யப்படுவார்.

தேர்ச்சிப் பரீட்சை ஏதேனுமொன்றிற்குத் தோற்றியிராத அல்லது தேர்ச்சிப் பரீட்சைகளிலிருந்து தவிர்க்கப்பட்ட 29-1-60-க்கு முன் சேர்க்கப்பட்ட ஒவ்வொரு உத்தியோகத்தரும் சுகவீனம் அல்லது சட்டப் பெறுமதியான காரணங்களினுல் தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்ற முடியவில்லையென உள்ளூராட்சி சேவை அதிகார சபைக்கு திருப்திகரமாக நிரூபித்தால் தவிர கட்டாயமாக இளைப்பாறச் செய்யப்படுவார்.

17-8-63-லிருந்தோ அல்லது அதற்கு பின்போ புதிய நியமனம் பெற்றவர்களும் உத்தியோகத்தர்கள் என்று கருதப்படுபவர்களும், 'பழைய சேர்வு உத்தியோகத்தர்களாக'த் தொடர்ந்து அழைக்கப்படுபவர்களுமான உள்ளூராட்சி சேவை உத்தியோகத்தர்கள் நிபந்தனைகளின்படி சிங்கள தேர்வுப் பரீட்சையில் சித்தியடைவது அவசியமாகும். குறிக்கப்பட்ட காலத்திற்குள் தேர்வுப் பரீட்சையில் சித்தியடையத் தவறுபவர்கள் தமக்குரிய நிலையான பதவிகளுக்கு பின்தள்ளப்படுவார்கள்

இந்த நிபந்தனையின்பேரில் நியமனம் பெறும் ஊழியர்கள் தமது புதிய நியமனங்களின் சிரேஷ்ட தகைமையில் நிறுத்தி வைக்கப்படுவர். சிங்களப் பரீட்சையில் உரிய தேர்ச்சியை குறித்த காலப் பகுதிக்குள் அடைந்தால் சம்பள உயர்வு கிடைக்கும்.

சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையவேண்டியிராத பதவிகளைத் தற்போது வகிக்கும் உத்தியோகத்தர்கள் பரீட்சையில் சித்தியடையவேண்டிய நியமனங்களைப் பெறும் பட்சத்தில் சிங்களத் தேர்சிப் பரீட்சையில் சித்தியடையவேண்டும். சிங்கள உத்தியோகத்தர்கள் எனின் 2 1/2 வருடங்களும் சிங்களவரல்லாத உத்தியோகத்தர்கள் எனின் 3 1/2 வருடங்களும் அவர்களது புதிய நியமனத் திகதியிலிருந்து அவகாசம் கொடுக்கப்படும்.

உத்தியோக கரும மொழிக் கொள்கையைப் பொறுத்தவரையில் 3 வருட தகுதிகாண் நிலையில் உள்ள புதிய சேர்வாளர்கள் தமது நியமன காலத்திலிருந்து 3 வருடங்களுக்குள் குறைந்தது 7-ம் வகுப்பு சிங்களப் பரீட்சையாவது சித்தியடைந்திருத்தல் அவசியமானது.

29-1-60 முதல் பதவி உயர்வு பெற்றவர்களும் அவர்களது நியமனங்கள் ஒரு வருடத்தின் பின் உறுதிப்படுத்தப்படுதலுக்கு உட்பட்டவர்களுமான உத்தியோக கருமமொழிக்கொள்கையைப் பொறுத்தவரையில் 'பழைய சேர்வையாளர்கள்' எனக் கருதப்படுபவர்கள் சிங்களப் பரீட்சையில் சித்தியடையத் தவறின் அவர்கள் பதவிகளில் உறுதிப்படுத்தப்படமாட்டார்கள். 7-ம் வகுப்புத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடையத்தவறிஞல் அவர்களது தகுதி காண் நிலைக்கலாம் அல்லது பரீட்சை நிலைக்காலம் நீடிக்கப்படும். ஆனுல் அவர்கள் 3-ம் வகுப்பும், 5-ம் வகுப்பும் சித்தியடைந்திருந்தால் உள்ளூராட்சி சேவைப் பிரமாணத்திற்குட்பட்டதாக அவர்களுக்குரிய முதலாவது இரண்டாவது சம்பள உயர்வுகள் கொடுக்க அனுமதி வழங்கப்படலாம்.

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சிங்கள தேர்சிப் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்கள் அல்லது 1962-63-ல் நடைபெற்ற 'சிங்களப் பரீட்சைகளில் சித்தியடைந்திராவிடினும் அவற்றிற்கு தோற்றியவர்கள் அல்லது 1962-63 நடைபெற்ற தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்றியிராத ஆனுல் இத் தேர்ச்சிப் பரீட்சைகளுக்குத் தாம் தோற்ற இயலாமையைத் திருப்திகரமாக விளக்கியவர்களுக்கு விரும்பியபோது இளைப்பாறும் வயதை அடையும் சேவை நீடிப்பை வழங்க அதிகார சபை முடிவுசெய்துள்ளது.

சிங்கள உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில் 9-5-67 க்குப் பின்னும் சிங்களவரல்லாத உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில் 9-5-68 க்குப் பின்னும் சேவை நீடிப்பு அனுமதி கொடுப்பது அந்த உத்தியோகத்தர் அத்திகதிகளின் முன் 3-ம் தர சிங்கள பரீட்சையில் சித்தியடைவதனைப் பொறுத்தே தங்கியுள்ளது.

உயர் தொழிலுக்குரிய, விஞ்ஞானத்திற்குரிய, தொழில்நுட்பத்துக்குரிய தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இந்த ஏற்பாடு பொருந்தாது.

---

## தொழிலாளருக்காக போராடியவர்"

### கந்தசாமி தினத்தில் அரியரத்தினம் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

"கந்தசாமி, தொழிலாள வர்க்கத்தின் முன்னேற்றத்திற்காக தொழிற்சங்க இயக்கத்தில் ஈடுபட்டு போராடியதன் மூலம் 17 வருடங்களுக்கு முன் தன்னுடைய உயிரை தியாகம் செய்தார்" என்று வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் நடைபெற்ற தியாகி கந்தசாமியின் ஞாபக தினக்கூட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். பிரதேசக் காரியதரிசி திரு. ஐ. ஆர். அரியரத்தினம் பேசுகையில் கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:-

இன்றைய தினம் தொழிலாளி வர்க்கம் தன்னுடைய வாழ்க்கைத் தரத்தைக் கூட்டுவதற்கு பல கிளர்ச்சிகளை செய்து கொண்டு வருகின்றது. ஆனுல் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தை நடத்துவதற்கு 1947-ம் ஆண்டில் நிலவிய சூழ்நிலையிலும் பார்க்க இன்றைய தினம் மிகவும் சாதகமான சூழ்நிலை உருவாகியிருக்கின்றது.

தொழிற்சங்க இயக்கங்களில் வேலை செய்யும் சில தனிபோக்குவாதிகள் தொழிலாளிகள் மத்தியில் போலிப் புரட்சி கோஷங்களை முன்வைத்து தொழிற்சங்க இயக்கத்தை இடதுசாரி ஐக்கிய முன்னணி போன்ற முற்போக்குச் சக்திகளிடம் இருந்து பிரிக்க முயலுகிருர்கள். எமது நாட்டில் ஒரு சிறிலங்கா சுதந்திரக்கட்சி-ஐக்கிய இடதுசாரி முன்னணிக் கூட்டாட்சி ஏற்படுவதை தடைசெய்வதே இரு பகுதியினரதும் பொது நோக்கமாகும்" இதை தொழிலாளர் வர்க்கம் நிராகரிக்கும்என்பதில் சந்தேகமில்லை.

---

## தற்கொலை

அக்கரைப்பற்று, ஞாயிறு

திருமணமாகி பத்துமாதத்தின்பின்னர் மணவாழ்க்கையில் ஏற்பட்ட திடீர் வெறுப்புணர்ச்சியால் ஒருவர் நஞ்சுத்திராவகத்தை அருந்திக்கொண்டு தற்கொலைசெய்தபரிதாப சம்பவமொன்று தம்பிலுவில் கிராமத்தில் நேற்று நிகழ்ந்துள்ளது.

மா. ஆறுமுகம் என்னும் வாலிபர் கடந்த பத்துமாதங்களுக்கு முன்பு பங்கயவல்லியைத் திருமணம் செய்தார். திருமணவாழ்க்கையில் மனக்கசப்பு சமீபத்தில் ஏற்பட்டதாகவும் இதனுல் நச்சுத்திராவகத்தை அருந்திக்கொண்டு வீட்டுக்குச் சமீபத்திலுள்ள வீதிக்கரையில் தற்கொலை செய்துகொண்டார்என்றும் விசாரணையில தெரியவந்தது.

திருமதி பங்கயவல்லி ஆறுமுகம் எட்டுமாத கர்ப்பிணியாக இருக்கிருர் என்று விசாரணையின்போது தெரியவந்தது.

---

## கும்பாபிஷேகம்

நல்லூர், திங்கள்

காங்கேசன்துறை கசாத்துறை ஆனந்தப் பிள்ளையார் கோவிலில் வருகிற வெள்ளிக்கிழமை கும்பாபிஷேகவைபவம் நடைபெறவிருக்கின்றது. கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பன்னிரண்டுதினங்கள் அபிஷேக ஆராதனைகள் நிகழவும் ஏற்பாடாகியுள்ளது.

# சீனியைப் பதுக்கிவைத்தால் கடும் நடவடிக்கை

கொழும்பு, ஞாயிறு

நாட்டில் சீனிப பற்ருக்குறை ஏற்படவில்லையென்று உணவு இலாகா அறிவித்துள்ளது. சில வியாபாரிகள் வேண்டுமென்றே சீனிப் பற்ருக்குறையைஏற்படுத்துகின்றனர் என்றும் இந்த வியாபாரிகளேயும், வர்த்தகர்களையும் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வரும்படியும் உணவு இலாகா அதிகாரிகள் கேட்டுள்ளனர்.

வெள்ளைச் சீனியிலும் பார்க்க பழுப்புச் சீனியின் விலை ஓரளவு குறைவாகவிருப்பதாக உணவு இலாகா ஏராளமான அளவு பழுப்புச் சீனியை வாங்கியதென்றும் இதன் காரணமாகவே நாடு பூராவும் இப்பொழுது பழுப்புச் சீனி விற்பனை செய்யப்படுகிறதென்றும் உணவு இலாகா அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

சில வர்த்தகர்கள், சீனியைப் பதுக்கிவைத்து வேண்டுமென்றே தட்டுப்பாட்டை ஏற்படுத்துகிருர்கள் என்றும் கள்ளச் சந்தை, பதுக்கிவைக்கும் வியாபாரிகள், வர்த்தகர்களை தங்களது கவனத்துக்குக் கொண்டுவரும்படியும் உணவுப் பகுதி அதிகாரியொருவர் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

பதுக்கிவைக்கும் எந்த வியாபாரிகளுக்கும் கடுமையான தண்டனை விதிக்கப்படும்.

## தேசிய அபிவிருத்தி வங்கி

நல்லூர், ஞாயிறு

இலங்கையில் தேசிய அபிவிருத்தி வங்கி ஒன்று விரைவும் நிறுவப்படவிருக்கின்றது இதற்கான சகல ஏற்பாடுகளும் நிதி அமைச்சினுல் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. விவசாய கைத்தொழில் அபிவிருத்திக்கு உதவுவதே இந்த வங்கியின் முக்கிய நோக்கமாக இருக்கும்.

நிதிமந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின இது சம்பந்தமாக நிதி அமைச்சு உத்தியோகத்தர்களுக்குப் பிறப்பித்துள்ள உத்தரவைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மக்கள் வங்கி அதிபர்களுடனும் திறைசேரி உத்தியோகத்தர்களுடனும் நிதி அமைச்சர் ஆலோசனை நடத்தியுள்ளார். வங்கிக்குழு ஒன்றும் அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டுக் கைத்தொழில்களை வளர்ப்பதற்கு இலகுவான முறையில் கடன்வசதி அளிப்பதற்கும் கைத்தொழிலுக்கும் வர்த்தகத்துக்கும் அரசாங்கம் உதவி வரும். கடன் வசதிகளைப் புனருத்தாரணம் செய்வதற்கும் வங்கிக் குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

---

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்ட மத்திய மகா வித்தியாலயம், மகா வித்தியாலயம் மற்றும் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டி, மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்றது.

இவ்விளையாட்டுப் போட்டிக்கு உதவி கல்வி வித்தியாதிபதி திரு. எஸ. தணிகாசலம் தலைமை தாங்கினுர். சில விளையாட்டுக்கள் நேற்று முன்தினமும் நடைபெற்றது. திருமதி எஸ். தணிகாசலம் பரிசில்களை வழங்கினுர்.

---

## மகாநாட்டு மண்டபம்

கொழும்பு, ஞாயிறு

ஐ. நா. சபைக் கட்டிடத்துக்கு மாதிரிப்படம் வரைந்தவரான அமெரிக்கச் சிற்பி திரு. சொரன்ஸன், இலங்கையில், சீன அரசாங்கத்தின் உதவியால் நிர்மாணிக்கப்படவிருக்கும் சர்வதேச மகாநாட்டு மண்டபத்துக்கும் மாதிரிப்படம் வரைவார் என்று கூறப்படுகிறது. மராமத்து பகுதியைச் சேர்ந்த ஒருவர் ஏற்கனவே திரு. சொரன்ஸனுடன் இதுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். சர்வதேசமகாட்டு மண்டபம் அமைப்பதுபற்றி முதன்முதலில் 1960-ம் ஆண்டிலேதான ஆலோசிக்கப்பட்டது. இதுபற்றிய யோசனையைத் தெரிவித்தவர்கள் பண்டாரநாயகா ஞாபகார்த்த நிதிக்குழுவினராவர்.

## திறப்புக்கோர்வைக்கு உரியவர் யார்?

யாழ்ப்பாணம், திங்கள்

ஒரு முறிந்த திறப்புடன் கூடிய 7 திறப்புக்களைக் கொண்ட திறப்புக் கோர்வை யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்துக்குச் சமீபமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் 'ஈழநாடு' பத்திரிகைக் காரியாலயத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

---

## போட்டியின்றி தலைவர் முயற்சி தோல்வி

அக்கரைப்பற்று, ஞாயிறு

அக்கரைப்பற்று மத்திய கிராம சபையின் பொதுத் தேர்தல் சமீபத்தில் முடிவடைந்துள்ளது. அடுந்தவார இறுதிப்பகுதியில் தலைவருக்கான தேர்தல் நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

6 முஸ்லிம்களையும், தமிழர்களையும் கொண்ட இக்கிராம சபையில் 6 முஸ்லிம்கள் ஒன்று சேர்ந்து போட்டியில்லாது ஒருவரைத் தலைவராகத் தெரிவு செய்வது சம்பந்தமாக ஆலோசிக்கும் பொருட்டு கூட்டமொன்று நடைபெற்றது. போட்டியின்றி ஒருவரைத் தெரிவு செய்யவேண்டுமென்ற பிரச்னையில் ஏற்பட்ட கருத்துவேறுபாட்டினுல் மாஜித் தலைவரும் 6-ம் வட்டார உறுப்பினருமான ஜனுப் எம். எம். அபூபக்கர் கூட்டத்திலிருந்து வெளியேறிவிட்டார்.

"வருடத்துக்கு ஒரு முறை முஸ்லிமும் தமிழரும் தலைவராக வரக்கூடிய முறையில் தமிழர்களுடன் சேர்ந்து ஒத்துழைத்து ஒரு கூட்டு முன்னணியை உருவாக்குவதற்கு முன்வந்துள்ளேன். இதுசம்பந்தமாக 4 தமிழ் உறுப்பினர்களையும் கூட்டி இந்த வாரத்தில் முடிவு செய்யவிருக்கின்றேன்" எனறு அவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## மரண அறிவித்தல்

### வி. ஆறுமுகம்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பிரபல சிற்பாசாரியார் திரு. வி. ஆறுமுகம் அவர்கள் காலஞ்சென்றுவிட்டார்கள். அன்னுரின் ஈமச்சடங்கு இன்று காலை (திங்கட்கிழமை 8-6-64) 10 மணியளவில் திருநெல்வேலி மயானத்தில் நடைபெறும்.

இங்ஙனம்: மகாஜனக்கல்லூரி ஆசிரியர் ஆ. தம்பித்துரை, மற்றும் ஆ. சிவரத்தினம், சகோதரர்களும். 497

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டுஜூன் மாதம் 8-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.